# புதிய ஜனநாயகம்

ஜூலை 2013
ரூ.10.00



போலி கம்யூனிஸ்டுகள்:

# பார்ப்பன பாசிசத்தின் பல்லக்குத் தூக்கிகள்!



## ஐ.சி.எப். ரயில்பெட்டித் தொழிற்சாலை உணர்த்தும் உண்மை:

# பகற்கொள்ளையின் மறுபெயர்தான் தனியார்மயம்!

**மா**டர்ன் ஃபுட்ஸ், ஆல்வின் முதலான பொதுத்துறை நிறுவனங்களை, அவற்றின் சொத்துக்களோடு அடிமாட்டு விலையில் தனியாரிடம் ஒப்படைத்ததைப் போலவே, இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் ரயில் போக்குவரத்து துறைக்கு ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் பணியையும் தனியாருக்குத் தாரை வார்க்கும் சதியை ஆளும் கும்பல் வேகமாகச் செய்து வருகிறது. இது, ரயில்வே துறையைப் படிப்படியாகத் தனியார் முதலாளிகளிடம் ஒப்படைப்பதற்கான ஒரு முன்னோட்டமே ஆகும்.

கடந்த பிப்ரவரி 13 அன்று சென்னை ஐ.சி.எப். மற்றும் பஞ்சாபின் கபூர்தலாவிலுள்ள ஆர்.எப்.சி. தொழிற்சாலைகளின் பொது மேலாளர்களுக்கு ரயில்வே வாரியம் அனுப்பிய கடிதத்தில், தனியார் நிறுவனங்களின் மூலம் தயாரிக்கவுள்ள பல்வேறு வகையான ரயில் பெட்டிகளின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை அந்நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. ஐ.சி.எப்.புக்குச் சொந்தமான தொழில்நுட்பக் களஞ்சியங்களான ரயில் பெட்டிகளின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் மீதான தன்னுரிமைகள் ஐந்து ஒப்பந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்நிறுவனங்கள் ரூ. 610 கோடி செலவில் 400 ரயில் பெட்டிகளைத் தயாரிக்கப் போவதாகவும் ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் இயங்கும் மூன்று தனியார் நிறுவனங்களான டிட்டாகர் வேகன்ஸ் - 99 குளிரூட்டப்பட்ட மின்சார வண்டிகளையும், பெஸ்கோ - 8 மின்சார வண்டிகளையும், ஜெசாப்- 59 குளிரூட்டப்பட்ட மின்சார வண்டிகளையும் தயாரிக்க உள்ளன. பெங்களூரிலுள்ள பொதுத்துறை நிறுவனமான பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனம் (பி.இ.எம்.எஸ்) 72 குளிரூட்டப்பட்ட மின்சார வண்டிகளையும் 160 மின்சார வண்டிகளையும் தயாரிக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய மூன்று தனியார் நிறுவனங்களும் மே.வங்க அரசாங்கத்தாலேயே தகுதியற்றவை என்று ஏற்கெனவே வேறு சில ஒப்பந்தங்களில் ஒதுக்கப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்ப வசதிகளோ, அதற்கான ஆற்றலோ இல்லாதவைதான் இந்நிறுவனங்கள். இந்நிலையில் ஒப்பந்தப்படி, ரயில் பெட்டிகளைத் தீர்மானிக்கப்பட்ட கால இலக்கிற்குள் தரமாக இந்நிறுவனங்கள் செய்து முடிக்கும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை.

பத்தாண்டுகளுக்கு முன்பு, ஜெர்மனியின் உற்பத்தியாளர்களிடமிருந்து ஐ.சி.எப். மற்றும் ஆர்.சி.எப். நிறுவனங்கள் ரூ.160 கோடி செலவிட்டு ''எல்.எச்.பி. டிசைன்'' எனப்படும் ரயில் பெட்டிகளின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை வாங்கியுள்ளன. இவற்றின் தற்போதைய மதிப்பு ஏறத்தாழ ரூ.1500 கோடிகளாகும். இந்த வரைபடங்களையும் ஆவணங்களையும் தனியார் முதலாளிகளுக்கு இலவசமாக அள்ளிக் கொடுக்க வேண்டுமென்கிறது ரயில்வே வாரியத்தின் ஒப்பந்தம். மேலும், இந்த ஒப்பந்தத்தின்படி, 59 ரயில் பெட்டி உற்பத்திக்காக 80,610 கிலோ எஃகு உலோகத்தை இலவசமாக இத்தனியார் ஒப்பந்த நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டும்; தனியார் நிறுவனம் தயாரிக்கும் இந்த ரயில் பெட்டிகளுக்கு சக்கரம் பொருத்துதல் (வீல் அசம்ப்ளி) இலவசமாக செய்து தரவேண்டும்; இவையும் போதாதென்று 26 வகையான டிராக்ஷன் கருவிகள் அனைத்தும் இலவசமாகத் தரப்படும்.

ரயில் பெட்டிகளின் உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டு, அதன் காரணமாக ரயில்வே வாரியம் இந்த முடிவை எடுக்கவில்லை. ஐ.சி.எப். ரயில் பெட்டித் தொழிற்சாலையில் ஆண்டுக்கு ஏறத்தாழ 1,700 ரயில் பெட்டிகள் தயாராகின்றன. இவை உள்நாட்டுப் பயன்பாட்டுக்கு மட்டுமின்றி, இதர நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தனது ஐம்பதாண்டு கால அனு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

## போலி கம்யூனிஸ்டுகள்:

# பார்ப்பன பாசிசத்தின் பல்லக்குத் தூக்கிகள்!

வலது-இடது போலி கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்ற அரசியல் சாக்கடையில் தம் சொந்த விருப்பத்தின் பேரில்தான் இறங்கியிருக்கின்றனர் என்பது உண்மையே எனினும், அவர்களைத் திணறத்திணற அந்தச் சாக்கடைக்குள் முக்கி எடுப்பதற்கு ஒரு ஜெயலலிதா தேவைப்படுகிறார். நடந்து முடிந்த மாநிலங்களவைத் தேர்தல் கூத்துகள் போலிகளின் முகவிலாசத்தை முற்றிலும் அம்பலமாக்கிவிட்டன. தங்களுடைய மாநிலங்களவை வேட்பாளருக்கு ஜெயலலிதாவிடம் ஆதரவு கோரி சென்னைக்குக் காவடி எடுத்த வலது கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களைக் காக்க வைத்து, பார்க்க மறுத்து, பிறகு ஆதரவு இல்லை என்று டில்லியில் அறிவித்து கதவை மூடிய பின்னரும் காம்பவுண்டுக்கு வெளியே காத்திருந்தனர் போலி கம்யூனிஸ்டுகள்.

ஐந்து வேட்பாளர்களை அறிவித்து, அதில் சரவணபெருமாள் கிரிமினலென்று அம்பலமான பின்னரும் விடாமல், மாற்று வேட்பாளரை அறிவித்து, அந்த வேட்பாளரை வெற்றிபெறச் செய்யுமளவுக்கு வாக்குகளைத் திரட்ட முடியாது என்று தெரிந்த பின்னர்தான், பிச்சைக்காரனுக்கு மிச்சம்மீதியை எறிவதைப் போல ஒரு இடத்தைப் போலிகளுக்கு விட்டெறிந்தார் ஜெயலலிதா. தன்னுடைய ஆசிபெற்ற தா.பாண்டியனுக்குப் பதிலாக ராஜாவை நிறுத்திய தன் காரணமாகத்தான் இந்த விசேட அவமதிப்பு என்று பத்திரிகைகள் எழுதுகின்றன. ஜெயலலதாவின் அவமதிப்புகளை இயல்பாக எடுத்துக் கொள்ளும் பக்குவத்தில் அ.தி.மு.க. அடிமைகளை விஞ்சியவர்கள் போலிகள்.

பாபர் மசூதி இடிப்பை வெளிப்படையாக ஆதரித்த ஜெயாவுடன் 2001 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி வைத்துவிட்டு, "அவர் மாறிவிட்டார்" என்று விளக்கமளித்தனர். மதமாற்றத் தடைச்சட்டம், கிடாவெட்டுத் தடை சட்டம், அரசு ஊழியர் மீதான அடக்குமுறை - என அடுக்கடுக்காக விழுந்தன செருப்படிகள். "தஞ்சை விவசாயிகள் பஞ்சத்தால் எலிக்கறி தின்கிறார்கள்" என்று சொன்னதற்காக இவர்களது எம்.எல்.ஏ.வின் வீடு தாக்கப்பட்டது. "தரிசு நிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்காதீர்கள், நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுங்கள்" என்று கேட்ட இவர்களை "நிலம் கேட்பீர்கள், பிறகு அதை உழுவதற்குப் பணம் கேட்பீர்கள்" என்று ஜெ எள்ளி நகையாடினார். இந்த ஆளும் வர்க்க, பார்ப்பனத் திமிரும் அவமதிப்புகளும் போலி கம்யூனிஸ்டுகளுக்கு எள்ளளவும் கோபத்தை ஏற்படுத்தாமைக்கு ஒரே காரணம், அவர்களுக்கும் அ.தி.மு.க.வின் பிழைப்புவாத அடிமைகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை - தோளில் போட்டிருக்கும் துண்டின் நிறத்தைத் தவிர.

தனியார்மய எதிர்ப்பையும் மதச்சார்பின்மையையும் வைத்துத்தான் போலிகள் தங்களைச் சந்தைப்படுத்திக் கொள்கிறார்கள். தனியார்மய எதிர்ப்பு மே.வங்கத்தில் சந்தி சிரித்து விட்டது. எஞ்சியிருப்பது மதச்சார்பின்மை. இந்தியாவில் மிக மோசமான சந்தர்ப்பவாதக் கட்சிகூட வெறுத்து ஒதுக்கும் பாசிசக் கொலைகாரன் மோடியை "தனது அருமை நண்பர்" என்று திமிராகப் பிரகடனம் செய்து கொள்ளும் ஒரே அரசியல்வாதி ஜெயலலிதா. "அடுத்த பிரதமர் மோடி அல்லது ஜெயலலிதா" என்று சோ உள்ளிட்ட பார்ப்பனக் கும்பல் ஏற்கெனவே பிரச்சாரம் செய்து வருகிறது. இதெல்லாம் தெரிந்துதான் போலி கம்யூனிஸ்டுகள் ஜெயலலிதாவுக்குப் பல்லக்குத் தூக்குகிறார்கள். நாளை மோடியை ஜெ ஆதரிக்கும் போது, "நாங்கள் ஜெயலலிதாவுடன்தான் கூட்டணி, அவர் மோடியுடன் கூட்டணி வைத்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல" என்று இவர்கள் கூசாமல் பேசுவார்கள். போலிகளின் தனியார்மய எதிர்ப்பு முகமூடி மமதா பானர்ஜி என்றவொரு பாசிஸ்டின் கையால் கிழிபட்டது. மதச்சார்பின்மை முகமூடியோ ஒரு பார்ப்பன பாசிஸ்டின் கரத்தால் கிழிக்கப்படுவதற்காகக் காத்திருக்கிறது. •


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 28 இதழ்: 9**

**ஜூலை 2013**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *ரவி*



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# சட்டீஸ்கர் தாக்குதல்:

# ‘நடுநிலையாளர்’களின் பசப்பல்!

**மாவோயிஸ்டுகளை வன்முறையாளர்கள் எனச் சாடுவதன் வழியாகத் தோற்றுவிட்ட இந்த அரசமைப்பின் மீது பிரமையை உருவாக்க முயலுகிறார்கள்.**

**ச**ல்வாஜுடும் கொலைப்படைத்தலைவன் மகேந்திர கர்மா முதல் அவசரநிலைக் காலக் கொடுங்கோன்மையின் தளபதி வி.சி.சுக்லா வரையிலான மக்கள் விரோதிகளுக்குப் பதிலடி கொடுத்த மாவோயிஸ்டுகளின் பஸ்தார் தாக்குதலைத் தொடர்ந்து, சர்வகட்சிஓட்டுப் பொறுக்கிகளும் குமுறி எழுந்துள்ளனர்.

‘‘மாவோயிஸ்டுகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்’’ என்றும் அதற்கு ‘‘எல்லா ஜனநாயக சக்திகளும் ஒன்று திரள வேண்டும்’’ என்றும் அறைகூவியிருக்கிறது ‘மார்க்சிஸ்டு’ கட்சி. அது மட்டுமல்ல, ‘‘மாவோயிச சவாலை நாங்கள் அரசியல் ரீதியில் எதிர்கொள்வோம்’’ என்று ஒரு பேச்சுக்கு சொல்லி வந்த மார்க்சிஸ்டுகள், இப்போது சோ மற்றும் பாரதிய ஜனதாவைப் போல வெறித்தனமாகப் பேசத் தொடங்கி விட்டார்கள்.

‘‘பழங்குடி மக்கள் யார், மாவோயிஸ்டுகள் யார் என்று பிரித்தறிய முடியாத காரணத்தினால்தான் மக்கள் போலீசு ஒடுக்குமுறைக்கு உள்ளாக நேரிடுகிறது’’ என்றும், மாவோயிஸ்டுகளின் வன்முறைக்கும், சல்வாஜுடுமின் எதிர்வன்முறைக்கும் (counter violence unleashed by Salwa Judum) இடையே பழங்குடி மக்கள் சிக்கித் தவிப்பதாகவும் கூறி, பிஜாபூரில் சாதாரண பழங்குடி மக்கள் துணை இராணுவப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தியிருக்கிறார்கள் (பீப்பிள்ஸ் டெமாக்ரசி, மே 27 - ஜூன் 2). அது மட்டுமல்ல, ‘‘மாவோயிஸ்டுகளின் வன்முறைக்கு எதிர் வன்முறையாகத்தான் சல்வாஜுடும் தோன்றியது’’ எனக் கேடுகெட்ட முதலாளித்துவப் பத்திரிகை கூட கூறத் துணியாத பொய்யை பீப்பிள்ஸ் டெமாக்ரசி கூறுகிறது.

அக்கட்சியின் தமிழக எம்.எல்.ஏ. வான பாலபாரதி மஞ்சள் பத்திரிகையான குமுதம் ரிப்போர்ட்டரில் (6.6.2013) மகேந்திர கர்மாவின் புகழ் பாடுகிறார். சல்வா ஜூடும் என்பது மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்டவர்களை வைத்து மகேந்திர கர்மா உருவாக்கிய ஆயுதம் ஏந்திய அமைதிப்படையாம். முள்ளை முள்ளால் எடுப்பது போல அந்தப் படையில் பழங்குடியினருக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்தாராம். அதுதான் மாவோயிஸ்டுகளின் கோபத்தை கிளறிவிட்டதாம்! சல்வா ஜூடும் என்பது பழங்குடி மக்களை விரட்டியடித்து, அவர்களுடைய கிராமங்களைப் பிடுங்கிக் கொள்வதற்காக, டாடா நிறுவனம் சட்டீஸ்கரில் மட்டும் உருவாக்கிய கூலிப்படை என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். தமிழகத்திலிருந்து சீறுகிறார், பால பாரதி.

பஸ்தார் தாக்குதலில் கொன்றொழிக்கப்பட்ட சல்வாஜுடும் குண்டர் படைத் தலைவன் மகேந்திர கர்மா (இடது) மற்றும் அவசரநிலைக் காலக் கொடுங்கோன்மையின் தளபதி வி.சி.சுக்லா.



மார்க்சிஸ்டுகளின் இந்த ‘‘அறச் சீற்றம்’’ ஒருபுறமிருக்க, பழங்குடி மக்களின் வாழ்வுரிமைக்காக குரல் கொடுக்கும் மேதா பட்கர் முதலானோரும், பி.யு.சி.எல். போன்ற சிவில் உரிமை அமைப்புகளும் மாவோயிஸ்டுகளின் நடவடிக்கையை வன்முறை என்றே சாடுகின்றனர். ‘‘மாவோயிஸ்டு அபாயத்தை எதிர்கொள்வது எப்படி? மாவோயிஸ்டுகளிடமிருந்து பழங்குடிகளை மீட்பதெப்படி?’’ போன்ற கேள்விகளை எழுப்பி அறிவுத்துறையினர், சமூகவியலாளர்கள், இராணுவ வல்லுநர்கள், முன்னாள் போலீசு, இராணுவ அதிகாரிகள், ஓட்டுக்கட்சிப் பிரதிநிதிகள் போன்றோர் ஆங்கிலத் தொலைக்காட்சிகளில் மாறிமாறி விவாதங்கள் நடத்துகின்றனர்; விதவிதமாக ஆய்வுக் கட்டுரைகள் எழுதுகின்றனர்.

எல்லோருமே இந்த சமூக அமைப்பின் ஒவ்வொரு மயிர்க்காலிலும் ஊடுருவியிருக்கும் உழைக்கும் மக்களுக்கு எதிரான வன்முறையின் பல்வேறு வடிவங்களையும் வசதியாகப் புறக்கணித்துவிட்டு, மறுகாலனியாக்க கொள்கைகளின் அமலாக்கத்தைத் தொடர்ந்து இவ்வன்முறைகளும் சுரண்டலும் தீவிரமான பரிமாணத்தைப் பெற்றுவருவதையும் புறக்கணித்துவிட்டு, மாவோயிஸ்டுகளின் வன்முறையை தனித்தவொரு பிரச்சினையாகக் காட்டி, அதனைக் கையாள்வது குறித்துப் பேசுகின்றனர்.



ப.சிதம்பரம்; பிரகாஷ் காரத்.

அதே நேரத்தில், இவ்வாறு பேசுபவர்கள் அனைவரும், ''மாவோயிஸ்டு பிரச்சினையை வெறும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையாகப் பார்க்கக்கூடாது; இது ஒரு சமூகப் பொருளாதாரப் பிரச்சினை'' என்று வலியுறுத்துவதன் மூலம் தங்களை முற்போக்காளர்களாகவும், மனிதாபிமானிகளாகவும் காட்டிக் கொள்கின்றனர்.

> ***மாவோயிஸ்டுகளின் வன்முறைக்கு எதிர் வன்முறைதான் சல்வாஜுடும் என்ற மார்க்சிஸ்டு கட்சியின் கருத்துக்கும், 'மாவோயிஸ்டுகளை அகற்றினால்தான் வளர்ச்சி சாத்தியம்; அதனால்தான் வேறுவழியில்லாமல் படைகளை அனுப்ப வேண்டியிருக்கிறது' என்ற ப.சிதம்பரத்தின் கருத்துக்கும் வேறுபாடு இல்லை.***

சமூகப் பொருளாதாரப் பிரச்சினை என்று இவர்கள் கூறுவதன் பொருள் என்ன? நாட்டின் ஆகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் மீது இந்த அரசமைப்பு திணித்திருக்கும் சமூகப் பொருளாதார ஒடுக்குமுறையை அவர்கள் குறிக்கவில்லை. மாறாக, நாட்டின் பிற பகுதிகளைப் போலன்றி, பழங்குடி மக்கள் வாழும் வனப்பகுதிகளுக்குச் சாலை, மின்சார வசதி, தொலைத்தொடர்பு இல்லாமையையும், அம்மக்களின் மிக மோசமான ஏழ்மை நிலையையும், போலீசு உள்ளிட்ட அரசு எந்திரத்தின் நிர்வாகத்தின் கீழ் பழங்குடி மக்களின் கிராமங்கள் கொண்டு வரப்படாததையுமே அவர்கள் குறிப்பிடுகின்றனர். அரசின் எதிர்த்தரப்பு போல நின்று கொண்டு இவர்கள் எதைக் கூறுகிறார்களோ, அதையேதான் அரசும் கூறுகிறது.

''மாவோயிஸ்டு பிரச்சினை என்பதே சாராம்சத்தில் பழங்குடியினர் பிரச்சினைதான். இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போல அவை முன்னேறாத காரணத்தினால்தான் பழங்குடி மக்கள் மத்தியில் மாவோயிஸ்டுகள் எளிதில் ஊடுருவ முடிந்திருக்கிறது. நூறு நாள் வேலை போன்ற அரசின் வளர்ச்சித் திட்டங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவை பழங்குடி மக்களைச் சென்றடைந்து விட்டால், தானாகவே அம்மக்கள் மாவோயிஸ்டுகளைப் புறக்கணித்து விடுவார்கள். இந்த அச்சத்தின் காரணமாகத்தான் தங்கள் செல்வாக்குப் பகுதிக்குள் அரசின் வளர்ச்சித் திட்டங்களை நுழைய விடாமல் மாவோயிஸ்டுகள் தடுக்கிறார்கள்'' என்பதுதான் ப.சிதம்பரம், ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோரின் வாதம்.

மாவோயிஸ்டுகளின் வன்முறைக்கு எதிர் வன்முறைதான் சல்வாஜுடும் என்ற மார்க்சிஸ்டு கட்சியின் கருத்துக்கும், ''மாவோயிஸ்டுகளை அகற்றினால்தான் வளர்ச்சி சாத்தியம்; அதனால்தான் வேறு வழியில்லாமல் படைகளை அனுப்ப வேண்டியிருக்கிறது'' என்ற ப.சிதம்பரத்தின் கருத்துக்கும் வேறுபாடு இல்லை. சொல்லப்போனால், மார்க்சிஸ்டுகளின் கருத்து சிதம்பரத்தின் கருத்தைக் காட்டிலும் வெறித்தனமானது.

சல்வாஜுடும் என்ற சட்டவிரோதப் படையைக் கலைக்க வேண்டும் எனக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்தவர் ராமச்சந்திர குஹா. பஸ்தார் தாக்குதலுக்குப் பின், ''தொடர்கிறது பழங்குடி மக்களின் துயரம்'' என்ற தலைப்பில் இந்து நாளேட்டில் (மே - 28, 2013) அவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

''நக்சலைட்டுகள் வன்முறையை வழிபடுபவர்கள். ஜனநாயகத்துக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் எதிரானவர்கள். ஆனால், ஜனநாயக பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இவர்களை எப்படிக் கையாண்டிருக்க வேண்டும்? புத்திசாலித்தனமான போலீசு நடவடிக்கைகள் மூலம் நக்சலைட்டு தலைவர்களைத் தனிமைப்படுத்தியிருக்க வேண்டும். பழங்குடி மக்களுக்கு அவர்களது நிலம் மற்றும் காடுகளின் மீது அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை நேர்மையான முறையில் அமல்படுத்தி, கல்வி - சுகாதாரம் போன்ற சேவைகளையும் மேம்படுத்தியிருக்க வேண்டும்.

''சட்டீஸ்கர் அரசு இரண்டையும் செய்யவில்லை. அங்கே ஆயிரக்கணக்கான மக்களின் வெளியேற்றமும், அவர்கள் மீது ஏவப்பட்ட சித்திரவதைகளும் எனக்கு இராக்கையும் ஆப்கானையும் நினைவூட்டின. தந்தேவாடாவில் நான் பார்த்தவை குறித்து புவனேஸ்வரில் ஒரு கூட்டத்தில் விளக்கினேன். ஒரிசா முதல்வரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தார். சல்வாஜுடுமுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது. அதை சட்டீஸ்கர் அரசு லட்சியமே செய்யவில்லை.

சல்வாஜுடுமை வேறு பெயரில் இயக்கியது. இது தொடர்பாக பிரதமர், உள்துறை அமைச்சர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எல்லோரையும் பார்த்து விட்டோம். அவர்களுடைய அலட்சியம் சகிக்கவொண்ணாததாக இருந்தது.''

- என்று தனது அனுபவத்தைக் கூறிவிட்டு, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தனது ஆலோசனையையும் கூறுகிறார்.

''பிரதமரும் சோனியாவும் சேர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டும். பழங்குடி பகுதிகளில் சுரங்கங்களுக்குத் தரப்பட்டுள்ள உரிமங்களை நிறுத்தி வைக்க வேண்டும். பழங்குடி மக்களுக்கு அரசியல் சட்டத்தின் 5-வது ஷெட்யூல் வழங்கியுள்ள நில உரிமைகள் உத்திரவாதப்படுத்தப்பட வேண்டும். நக்சலைட்டுகளை ஒடுக்க விமானப் படையை அனுப்புவதைக் காட்டிலும், இதுதான் பயனுள்ள நடவடிக்கையாக இருக்கும்.''


ராமச்சந்திர குஹா; மேதா பட்கர்.

**மத்திய, மாநில அரசுகள் அரசியல் சட்டத்தின்படி நடந்து கொண்டிருந்தால், முதலாளிகள் பேராசை கொள்ளாமல் இருந்திருந்தால், அதிகாரிகள் மனச்சாட்சியுடன் நடந்து கொண்டிருந்தால், நக்சல்களின் வலையில் பழங்குடி மக்கள் சிக்க நேர்ந்திருக்காது என்ற 'மாபெரும் உண்மை'யைத்தான் முதலாளித்துவ அறிவு ஜீவிகள் திரும்பத்திரும்பக் கண்டுபிடிக்கிறார்கள்.**

பழங்குடி மக்களோடு மக்களாக இருக்கும் மாவோயிஸ்டு தலைவர்களைத் தனிமைப்படுத்தி ஒழிக்க வேண்டுமாம். சோனியாவும் மன்மோகன் சிங்கும் பஸ்தாருக்கு விஜயம் செய்ய வேண்டுமாம். ஏனென்றால், மாவோயிஸ்டுகளுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கிடையாதாம். பழங்குடி மக்களின் நிலங்களைப் பிடுங்கி கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்ப்பவரும், சல்வாஜுடும் கொலைப்படைக்கு ஆசி வழங்கியவருமான மன்மோகன் சிங் ஜனநாயகவாதியாம். கார்ப்பரேட்டுகளின் உள்ளூர் அடியாள் மகேந்திர கர்மாவுக்கு மாற்று, கார்ப்பரேட்டுகளின் தேசிய அடியாள் மன்மோகன்சிங்காம்!

பிரதமர் பஸ்தாருக்கு விஜயம் செய்தால் பழங்குடி மக்களுக்கு என்ன பயன் விளையும்? விதர்பா விவசாயிகளுக்கு மன்மோகன் சிங்கின் விஜயம் விளைத்த பயன் என்ன என்பதை பத்திரிகையாளர் சாய்நாத் எழுதவில்லையா? ''எஸ்.பி.ஓ. என்ற பெயரில் 1500 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கி வந்த சல்வா ஜுடும் படையினரின் பெயர் மாறியதும், மாதச்சம்பளம் 7000 ரூபாயாக உயர்ந்ததும்தான் உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் தொடுத்த பொதுநல மனுவின் பயன்'' என்று குஹாவுடன் சேர்ந்து மனுச்செய்த பேராசிரியை நந்தினி சுந்தர் மனம் நொந்து கூறவில்லையா?

சட்டீஸ்கர்-பிஜாபூர் மாவட்டத்திலுள்ள எடேஸ்மேடா கிராமத்தில் கடந்த மே 17 அன்று சி.ஆர்.பி.எஃப். படை நடத்திய போலிமோதலில் கொல்லப்பட்ட எட்டு பழங்குடியினரை நினைவுகூர்ந்து கதறியழும் அவர்களது உறவினர்கள்.



எந்த ஜனநாயக அமைப்பு முறையின் தோல்வி குறித்து தனது கட்டுரையின் முதற்பகுதியில் அங்கலாய்க்கிறாரோ, அதனிடமே கடைசிப் பத்தியில் சரணடைகிறார் குஹா. ராமச்சந்திர குஹா மட்டுமல்ல, முன்னாள் எல்லை பாதுகாப்புப் படை டி.ஜி.பி .ராம் மோகனும் அதைத்தான் கூறுகிறார். ''அரசியல் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையின்படி, தங்களுடைய நிலங்களைச் சுரங்கத்துக்கு தருவதா, இல்லையா என்று முடிவு செய்யும் அதிகாரம் முதல்வருக்கோ வனத்துறை அமைச்சருக்கோ கிடையாது, பழங்குடி மக்கள்தான் அதை முடிவு செய்யவேண்டும்'' என்கிறார்.

மெத்தப்படித்த மேதாவிகளும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுமான இவர்கள் அசட்டு முட்டாள்களா? அல்லது முட்டாள்களைப் போல நடிக்கிறார்களா? அங்கே பழங்குடி மக்களுக்கு எதிராகக் களத்தில் நிற்பவர்கள் டாடா, ஜிண்டால், வேதாந்தா, போஸ்கோ, ரியோ டின்டோ, எஸ்ஸார் போன்ற தரகு முதலாளிகளும் பன்னாட்டு முதலாளிகளும் என்பது இவர்கள் அறியாத இரகசியமா?

''கொலம்பஸுக்குப் பின்னர் நடைபெறும் பழங்குடி மக்களுக்கு எதிரான மிகப்பெரிய நில

அபகரிப்பு'' என்றும், ''டாடா ஸ்டீல், எஸ்ஸார் ஸ்டீல் நிறுவனங்கள் உயர்தர இரும்புக் கனி மங்கள் நிறைந்த 14 கிராமங்களையும் சுற்றுவட் டாரங்களையும் விழுங்குவதற்கு திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்'' என்றும் மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் நியமித்த நிலச்சீர் திருத்தங்களை ஆராய்வதற்கான துணைக்குழு தனது நகல் அறிக்கையில் (2009) வெளிப்படை யாகவே குற்றம் சாட்டவில்லையா?

தங்களுடைய இலாபவெறிக்காக எந்தச் சட்டத்தையும், எந்த மரபையும், எந்த அரசையும் வளைக்கவும் தகர்க்கவும் விலைபேசவும் தயங் காதவர்கள் இந்த முதலாளிகள் என்பதும், சல்வாஜுடும் என்ற கூலிப்படையைப் பூசை போட்டுத் துவக்கி வைத்ததே டாடா தான் என் பதும் இவர்கள் அறியாத உண்மைகளா?



ஒரிசாவின் பாரதீப் பகுதியில் அமையவுள்ள போஸ்கோ ஆலைக்காக வெற்றிலைக் கொடிக்கால் தோட்டங்களை அழிக்கவரும் போலீசாரை எதிர்த்துப் போராடும் விவசாயப் பெண்கள்.

மத்திய, மாநில அரசுகள் அரசியல் சட்டத்தின் படி நடந்து கொண்டிருந்தால், முதலாளிகள் பேராசை கொள்ளாமல் இருந்திருந்தால், அதிகாரி கள் மனசாட்சியுடன் நடந்து கொண்டிருந்தால், நக்சல்களின் வலையில் பழங்குடி மக்கள் சிக்க நேர்ந் திருக்காது என்ற ''மாபெரும் உண்மை''யைத்தானே இவர்கள் திரும்பத் திரும்பக் கண்டுபிடிக்கிறார்கள்.

2006-இல் குஹாவின் உரையைக் கேட்ட பிறகுதான் ஒரிசா முதல்வர், போலி ஆவணங்கள் தயார் செய்து போஸ்கோவுக்காக விவசாயிகளின் நிலங்களைப் பறித்துக் கொடுக்கிறார். பிரதமர் அலுவலகமே போஸ் கோவுக்காக நிலப்பறிப்பு நடவடிக்கைகளை முடுக்கி விடுகிறது. நாராயணபட்னாவில் அமைதிவழியில் போராடிய மக்களின் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்படு கிறார்கள்.

1984 சீக்கியப் படுகொலை, 1985 போபால் படு கொலை, 1992 பாபர் மசூதி இடிப்பு, 1993 மும்பை படு கொலை, 2002 குஜராத் படுகொலை, 2005 சல்வாஜுடும் படுகொலைகள் - என எல்லாப் படுகொலைகளுக்கும் துணைநின்ற இந்த அரசுக்கு வன்முறையைப் பற்றிப் பேசவும் அருகதை உண்டா என்ற கேள்வியை இவர்கள் எழுப்புவதில்லை.

மாவோயிஸ்டுகளின் தாக்குதலை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்றும், வன்முறை என்றும் சித்தரிப் பவர்கள், மக்களின் உரிமைகள் மீதும் உடைமைகள் மீதும் வாழ்க்கையின் மீதும் இந்த அரசும் ஆளும் வர்க் கங்களும் நடத்துகின்ற தாக்குதல்களை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்களாகவோ வன்முறையாகவோ கருது வதில்லை. இந்த அரசமைப்பில் உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகம் இல்லை என்ற உண்மையையும் கண்திறந்து பார்ப்பதில்லை.

பஸ்தாரைப் போலன்றி, பன்னாட்டு நிறுவனங்களும் அதிநவீன மால்களும் நிறைந்திருக்கும் ''வளர்ச்சி யடைந்த பகுதியான'' குர்கானின் மாருதி உள்ளிட்ட ஆலைகளில் நிற்கும் தனியார் பாதுகாப்புப் படையினர் நகர்ப்புற சல்வாஜுடும்தான் என்று அவர்களுக்குத் தோன்றுவதில்லை. சட்டபூர்வமான வழிகளிலேயே மக்கள் கொள்ளையிடப்படுகையில், அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிதான் என்ன என்ற கேள்விக் குள்ளேயே இந்த அறிவாளிகள் செல்வதில்லை.

தோற்றுவிட்ட இந்த அரசமைப்பின் மீது, தமக்கு எதிரானதென்று மக்கள் தம் சொந்த அனுபவத்திலேயே அன்றாடம் புரிந்து கொண்டு வரும் இந்த அரசமைப் பின் மீது, இவர்கள் மீண்டும் மீண்டும் பிரமையை உரு வாக்குகிறார்கள். அதோடு மட்டும் நிற்பதில்லை; பிரமையைக் கலைக்க முயற்சிப்பவர்களை நக்சலைட்டுகள் என்று எச்சரித்து ஒடுக்கச் சொல் கிறார்கள்.

''இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயகத்தை பன்றித்தொழுவம் என்று கூறுகிறார்கள் மாவோயிஸ்டு கள். இன்று பலரும் இதனை ஏற்றுக் கொள்ளக்கூடும்... இந்திய அரசு மற்றும் சமூகத்தின் மீதான மாவோயிஸ்டு களின் விமர்சனங்களும் பொய்யானவை அல்ல. ஆனால், அவர்கள் கூறும் தீர்வுதான் கற்பனையானது, அடைய முடியாதது'' என்று கூறிவிட்டு, மாவோயிஸ்டு களை நசுக்குவதற்கான வழிகளை விவரிக்கிறார் மோதல் மேலாண்மைக் கழகத்தின் (Institute of conflict managemtnt) இயக்குநர் அஜய் சாஹ்னி.

''மாவோயிஸ்டுகளைப் போல கேஜ்ரிவாலும்தான் இந்த அரசமைப்பின் மீது ஏமாற்றம் கொண்டிருக்கிறார். அவரும் இது ஊழலானது, மோசடியானது என்றுதான் கருதுகிறார். மாவோயிஸ்டுகளும் கேஜ்ரிவாலைப் போல ஏன் தேர்தலில் நிற்கக் கூடாது?'' என்று என்.டி.டி.வி தொலைக்காட்சி பேட்டியில் கேள்வி எழுப் பினார் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

இந்தக் கேள்விதான், மாவோயிஸ்டுகள் மீது ஏவப் படும் ஒடுக்குமுறைக்கான விடை.

● சூரியன்

# சந்தி சிரித்தது அமெரிக்காவின் யோக்கியதை!

**தனி மனித சுதந்திரத்தின் முதன்மையான எதிரி அமெரிக்காதான் என்பதை அந்நாட்டு அரசு நடத்திவரும் ஒட்டுக்கேட்பு திருட்டுத்தனங்கள் அம்பலப்படுத்திவிட்டன.**

அமெரிக்க அரசின் ஒட்டுக்கேட்பு மற்றும் இணைய தளக் கண்காணிப்பு சதித் திட்டத்தை எட்வர்டு ஜோசப் ஸ்னோடென் என்னும் இளைஞர் தனது உயிரைப் பற்றிக் கூட கவலைப்படாமல் துணிவுடன் அம்பலப்படுத்தியுள்ளார். இது ஏதோ அமெரிக்க மக்களின் மீதான கண்காணிப்பு மட்டுமல்ல, உலகெங்குமுள்ள மக்களையும் கண்காணிக்கும் அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் பாசிச சதித் திட்டம்.

அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆணையத்தின் (என்.எஸ்.ஏ.) இத்திட்டத்தின் மூலம் கடந்த மார்ச் 2013-இல் மட்டும் உலகெங்கிலும் ஏறத்தாழ 97 பில்லியன் (9700 கோடி) உளவுத் தகவல்களை அமெரிக்கா திரட்டியுள்ளது. அமெரிக்காவினுள் 3 பில்லியன் (300 கோடி) தகவல்கள் திரட்டப்பட்டிருப்பது மட்டுமின்றி, இரான், பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எனப் பல நாடுகளிலிருந்தும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இதில் இந்தியாவிலிருந்து மட்டும் 6.3 பில்லியன் (630 கோடி) உளவுத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அமெரிக்கக் கண்காணிப்பு வலையத்தில் இந்தியா ஐந்தாவது இடத்தில் இருக்கிறது.

ஏறத்தாழ 12 கோடி ரூபாய் அளவுக்கு சம்பளத்துடன், ஹவாய் தீவில் சொந்தமாகப் பண்ணை வீட்டுடன் வாழ்க்கையை நடத்தி வந்தவர்தான் கணினித் துறையில் வித்தகரான ஸ்னோடென் என்ற 29 வயதான இளைஞர். சிறிது காலம் அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வில் இயங்கிவந்த அவர், பின்னர் சி.ஐ.ஏ.வுக்கான தனியார் ஒப்பந்த நிறுவனத்தில் பணியாற்றினார். அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆணையத்தின் உளவு நடவடிக்கைகள் விரிவானதாகவும், அனைத்துலகையும் தழுவியதாகவும் இருப்பதைப் புரிந்து கொண்ட அவர், அமெரிக்க உளவுத் துறை உலகெங்கிலும் உள்ள மக்களை வேவு பார்ப்பது தொடர்பான ஆதாரங்களை ஊடகங்கள் மூலம் அம்பலப்படுத்தியுள்ளார்.

தற்கொலைப் படைத் தாக்குதலைப் போல, தனது வசதியான வாழ்க்கையைத் துறந்துவிட்டு பயங்கரவாத அமெரிக்காவுக்கு எதிராகத் துணிவுடன் போராடும் ஸ்னோடென்.



‘‘எனக்குப் பணத்தாசை இருந்தால், இந்த ஆவணங்களைப் பல நாடுகளுக்கு விற்றுக் கோடிகோடியாக நான் சம்பாதித்திருக்க முடியும். ஆனால், இவற்றை மக்கள் முன் அம்பலப்படுத்துவதே எனது நோக்கம்’’ என்கிறார் ஸ்னோடென். கடந்த ஐந்தாண்டுகளில் அரசமைப்பின் ஊழல்களையும் மோசடிகளையும் அம்பலப்படுத்தியவர்களை ஒபாமா அரசு அடக்கியொடுக்கியதை ஏற்கெனவே பார்த்துள்ள ஸ்னோடன், தான் தெரிந்தே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும், இதனால் தனக்கும் தனது குடும்பத்துக்கும் ஏற்படப்போகும் தொல்லைகளை அறிந்துள்ளதாகவும் கூறுகிறார்.

உலக மக்களுக்கு எதிரான அமெரிக்க அரசின் கிரிமினல் உளவு நடவடிக்கைகளை அம்பலப்படுத்திய குற்றத்துக்காக ஸ்னோடெனைத் தீவிரவாதியாகச் சித்தரிக்கிறது அமெரிக்கா. அரசு சொத்துக்களைத் திருடியது, தேசியப் பாதுகாப்புத் தகவல்களையும் இரகசிய உளவுத் தகவல்களையும் வெளியிட்டது முதலான குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் மீது அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தீவிரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் இந்தக் கண்காணிப்பையும் ஒட்டுக் கேட்டல்-உளவு பார்ப்பதையும் அமெரிக்க வல்லரசு நியாயப்படுத்துகிறது. அமெரிக்கா மட்டுமின்றி, அனைத்து ஏகாதிபத்திய நாடுகளும் மேலும் பாசிசமயமாகி வருவதன் வெளிப்பாடு இத்தகைய கண்காணிப்புகள். ‘‘கார்டியன்’’ நாளேட்டின் செய்தியின்படி, அமெரிக்க என்.எஸ்.ஏ.வுக்குப் போட்டியாக பிரிட்டிஷ் உளவுத்துறையானது, உலக மக்களையும் சொந்த நாட்டு மக்களையும் உளவு பார்த்துள்ள விவகாரம் அம்பலமாகியிருக்கிறது.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் முக்கியமான இணைய

இணைப்புத் தடங்களை நிர்வகித்து வரும் ஹாங்காங்கிலுள்ள பேக்நெட் நிறுவனத்தின் கண்ணாடி இழை இணைய வலைப்பின்னலை அமெரிக்க அரசு சட்ட விரோதமாக ஊடுருவிப் பார்த்திருக்கிறது; சீனாவின் பிரபல சிங்ஹூவா பல்கலைக்கழகத்தின் முக்கியமான கணினிகளை ஊடுருவி, அவற்றிலுள்ள தகவல்களை அமெரிக்க உளவுத்துறை வேவு பார்த்துள்ளது; கைபேசிகள் வழியாக சீன மக்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் குறுஞ்செய்திகளைக் கூட அமெரிக்க உளவுத் துறை திரட்டியிருக்கிறது - என்று ஸ்னோடென் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளார். ஏற்கெனவே தனது நாட்டின் இணையங்களில் ஊடுருவதாகப் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்கவுக்கும் சீனாவுக்குமிடையிலான மோதல் இதனால் மூர்க்கமடைந்துள்ளது.



விக்கிலீக்ஸ் மூலம் அமெரிக்காவின் கோர முகத்தை அம்பலப்படுத்திய ஜூலியன் அசாஞ்சே. விக்கிலீக்சுக்கு தகவல்களைக் கொடுத்ததாகக் குற்றம் சாட்டி சிறையில் வதைக்கப்படும் இராணுவ வீரர் பிராட்லி மேனிங்.

ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான கழுத்தறுப்புப் போட்டியும், மேலாதிக்கத்தை நிலைநாட்ட எதிர்ப்பு சக்திகளை முடமாக்குவதற்கும், மக்களின் அதிருப்திக்கு வடிகால் வெட்டுவதற்கும் உழைக்கும் மக்கள் மீதான இத்தகைய கண்காணிப்புகளும் உளவுபார்த்தலும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவசியமாகின்றன. அறிவியல்-தொழில்நுட்பப் புரட்சி இதனை எளிதாக்குவதால், இணையத்தின் வழியிலான கண்காணிப்பு தீவிரமடைந்து வருகிறது.

இந்தியாவிலோ, பயங்கரவாதத் தடுப்பு - கிரிமினல் குற்றத் தடுப்பு என்ற பொய் முகாந்திரங்களை வைத்து மக்கள் மீதான கண்காணிப்பை மத்திய-மாநில அரசுகள் அதிகரித்துவருகின்றன. மத்திய உளவுத் தரவுகளை ஒருங்கிணைக்கும் ''நாட்-கிரிட்'' என்ற தேசிய உளவு வலைப்பின்னல், ''ஆதார்'' அடையாள அட்டை, வீதிகளில் நிறுவப்படும் சி.சி.டி.வி. காமெராக்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் வடமாநிலத் தொழிலாளர்களின் தரவுகள் திரட்டப்படுதல் முதலானவை பாசிசம் வெகு வேகமாக நிறுவனமயமாகி வருவதை உணர்த்துகின்றன. இணையக் குற்றத் தடுப்புக்கான 66-ஏ பிரிவின் சட்டப்படி, சுதந்திரமாக இணையத்தில் கருத்து தெரிவித்தவர்கள் கைது செய்யப்படுகின்றனர். பாசிச ஜெயா அரசோ, இணையக் குற்றங்களில் ஈடுபட்டதாக ஒருவரைக் கைது செய்து சிறையிலடைக்கும் வகையில் குண்டர் சட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. இவையனைத்தும் இணையத்தின் மூலம் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிட முடியும், அதன் மூலம் புரட்சியையே சாதிக்க முடியும் என்று கருதிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்க அறிவுத்துறையினரது மாயைகளைக் கீழறுத்துப் போடுகிறது.

ஸ்னோடெனை ஆதரித்து ஹாங்காங்கிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே நடந்த ஆர்ப்பாட்டம்.




இதற்கு முன் விக்கிலீக்ஸ் மூலம் அமெரிக்காவின் கோர முகத்தை அம்பலப்படுத்திய குற்றத்துக்காக ஜூலியன் அசாஞ்சேவைப் பயங்கரவாதியாகச் சித்தரித்து அவரைப் பிடிக்க பேயாய் அலைந்தது அமெரிக்கா. விக்கி லீக்சுக்கு தகவல்களைக் கொடுத்ததாகக் குற்றம் சாட்டி பிராட்லி மேனிங் என்ற இளம் இராணுவ வீரரைச் சிறையிலடைத்து வதைத்து வருகிறது. இப்போது ஸ்னோடெனைப் பிடிக்க வெறியோடு அலைகிறது. கடந்த மே முதல்நாளில் ஹவாயிலிருந்து ஹாங்காங்கிற்குத் தப்பிச்சென்ற ஸ்னோடென், ஜூன் 25 அன்று ஹாங்காங்கிலிருந்து ரஷ்யாவுக்குத் தப்பிச் சென்றுள்

ளார். அங்கிருந்து கியூபாவுக்குச் சென்று, பின்னர் ஈகுவடார் நாட்டில் அவர் தஞ்சமடைய முயற்சிப்பதாகச் செய்திகள் வருகின்றன. மிகக் கொடிய கிரிமினல் குற்றவாளியான அவரை நாடு கடத்தித் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூச்சலிடுகிறது அமெரிக்கா. ஆனால், கிரிமினல்களை நாடு கடத்தும் ஒப்பந்தம் ஏதும் அமெரிக்காவுடன் எமது நாடு முறைப்படி போட்டுக்கொள்ளவில்லை என்று கூறி, அமெரிக்காவின் முகத்தில் கரிபூசியுள்ளது, ரஷ்யா.

ஜெனிவா ஒப்பந்தப்படி, தன்னிடம் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு அடைக்கலமளிக்க எல்லா நாடுகளுக்கும் உரிமை உண்டு. அமெரிக்கா கூடத் தனது உலக மேலாதிக்க நோக்கங்களுக்கு ஏற்ப பல நாடுகளின் சர்வாதிகாரிகளுக்குத் தஞ்சம் அளித்து, அவர்களை ஜனநாயகக் காவலர்களாகச் சித்தரித்துள்ளது. இத்தகைய மனிதகுல விரோதிகளுக்குத் தஞ்சம் அளிக்க அமெரிக்காவுக்கு உரிமை உண்டென்றால், அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் பயங்கரவாதச் சதிகளை அம்பலப்படுத்திப் போராடி வரும் ஸ்னோடெனுக்குத் தஞ்சமளிக்க எல்லா நாடுகளுக்கும் உரிமை உண்டு.

ஏகாதிபத்திய உலகின் கோர முகத்தை உலகிற்கு அம்பலப்படுத்திக் காட்டியுள்ள ஸ்னோடென் ஒரு முன்னுதாரணமிக்க நாயகனாக உயர்ந்து நிற்கிறார். தற்கொலைப் படைத்தாக்குதலைப் போல, தனது வசதியான வாழ்க்கையைத் துறந்துவிட்டுப் பயங்கரவாத அமெரிக்காவுக்கு எதிராக அவர் துணிவுடன் போராடுகிறார். ஜனநாயகம், மனித உரிமை, தனிநபர் சுதந்திரம் என்றெல்லாம் பசப்பிவரும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மகிமையையும், அமெரிக்க பயங்கரவாத அரசின் கோரமுகத்தையும் புரிந்து கொண்டு உலகெங்கிலுமுள்ள உழைக்கும் மக்கள் போராட இன்னுமொரு வாய்ப்பை வழங்கியிருக்கிறது, ஸ்னோடெனின் துணிச்சலான நடவடிக்கைகள்.

● குமார்

## "அம்மா மினரல் வாட்டர்"

# தண்ணீர் தனியார்மயத்தை ஊக்குவிக்கும் சூழ்ச்சி!

காற்றும் ஒளியும் போன்ற உயிரின் ஆதாரமும், உயிரினங்களின் உரிமையுமான தண்ணீரை, அரசாங்கமே விற்பனைப் பண்டமாக்கி புட்டியில் அடைத்து விற்று இலாபம் பார்க்கும் கேடுகெட்ட நடவடிக்கையை, மாபெரும் சாதனையைப் போல அறிவித்திருக்கிறார், ஜெயலலிதா.

''ஏழை, எளிய மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, குறைந்தவிலையில் பாதுகாப்பான குடிநீர் வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் தமிழகம் முழுவதும் 'அம்மா மினரல்வாட்டர்' உற்பத்தி நிலையங்களை அமைத்திட நான் உத்தரவிட்டுள்ளேன்'' என்று பிரகடனம் செய்துள்ளார்.

''மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக அனைத்துப் பொருள்களின் விலைகளும் உயர்ந்து கொண்டே செல்வதாகவும், இதன் விளைவாக ஏழை, நடுத்தர மக்கள் செய்வதறியாது விழிபிதுங்கி தவிப்பதாகவும், தமிழக மக்களை வாழவைக்கும் வகையிலும் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும்'' இட்லிக்கடை, கத்தரிக்காய் கடைக்கு அடுத்தபடி 'அம்மா வாட்டரை' அம்மாவின் அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறதாம்.

இந்தப் ''பாதுகாப்பான'' குடிநீரின் விலை லிட்டர் பத்து ரூபாயாம். அரசு போக்குவரத்துக் கழகங்களின் பொறுப்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர் தண்ணீர் பாட்டில்கள் தயாரிக்கப்படுமாம். மொத்தம் பத்து இடங்களில் தண்ணீர் கம்பெனிகள் திறக்கப்படும் என்றும், எல்லா பேருந்து நிலையங்களிலும் 'அம்மா வாட்டர்' விற்பனைக்கு வைக்கப்படும் என்றும் இந்த அறிவிப்பு கூறுகிறது.

'அம்மா' ஆட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டில் தவிக்கும் தலைநகரம்.



தண்ணீரை விற்பனைப் பண்டமாக்கி, கொள்ளை இலாபம் பார்க்க அனுமதிப்பதும், நீர் வளத்தை தனியார் முதலாளிகளின் தனியுடைமை ஆக்குவதும் மறுகாலனியாக்க கொள்கையின் விளைவுகள். தண்ணீர் தனியார்மயத்தைத் தீவிரப்படுத்துவதற்காகத்தான் ''தேசிய நீர்க்கொள்கை - 2012'' மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கொள்கை அறிவிக்கப்படுவதற்கு முன்னமே தமிழகத்தில் தண்ணீர் தனியார்மயக் கொள்கையை அறிமுகப்படுத்தியவர் ஜெயலலிதா. 2001-2006 - இல் ஜெ. அரசுதான் அன்றாடம் பல இலட்சம் லிட்டர் தாமிரவருணித் தண்ணீரை லிட்டர் ஒண்ணேகால் பைசா விலையில் கோகோ கோலா நிறுவனத்துக்கு கொடுக்க உத்தரவிட்டது. இன்று வரை இந்தத் தண்ணீர்க் கொள்ளை தொடர்ந்து வருகிறது.



சென்ற ஆட்சிக் காலத்தின் போது, திருப்பூரில் பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துத் திருப்பூருக்கு விநியோகம் செய்யும் உரிமையை பெக்டெல் என்ற பன்னாட்டு நிறுவனத்துக்கு ஜெ. அரசு வழங்கியது. தற்போது திருப்பூரின் சாயப்பட்டறைகள் பல மூடப்பட்டு, திருப்பூர் தொழிலகங்களின் தண்ணீர் தேவை குறைந்து விட்டதால், நாள்தோறும் பத்து கோடி லிட்டர் பவானி தண்ணீரை அந்த பன்னாட்டுக் கம்பெனியிடமிருந்து அரசே வாங்கிக் கொள்ளும் என்றும், ஆயிரம் லிட்டர் ரூ.4.50 என்று நிர்ணயிக்கப்பட்ட விலையை உயர்த்தி 21 ரூபாயாக கொடுக்கும் என்றும் தற்போது ஜெ. அரசு அறிவித்திருக்கிறது. வீராணத்திலிருந்து சென்னைக்குத் தண்ணீரைக் கொண்டுவரும் அரசுக்கு பவானியிலிருந்து திருப்பூருக்குத் தண்ணீர் கொண்டுவரத் தெரியாதாம். பவானித் தண்ணீரை பன்னாட்டுக் கம்பெனியிடமிருந்து அரசு விலை கொடுத்து வாங்குமாம். இந்த அயோக்கியத்தனத்துக்குப் பெயர்தான் தண்ணீர் தனியார்மயம்.

பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்குவதென்பது முடியாத காரியமோ பெரும் செலவு பிடிக்கும் விசயமோ அல்ல. தனியார் தண்ணீர் கம்பெனிகளின் கணக்குப்படியே ஒரு லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கு அவர்களுக்கு ஆகும் செலவு பத்து காசுதான். இந்த செலவும் இல்லாமல், இயற்கை முறையில் மிகவும் குறைந்த செலவில் தண்ணீரைச் சுத்திகரிக்கும் வழிகள் தமிழகத்திலேயே பல அறிவியலாளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

பாதுகாக்கப்பட்ட குடிநீரை இலவசமாக மக்களுக்கு வழங்க முடியும் என்ற போதிலும், தண்ணீரைத் தனியார்மயமாக்க வேண்டும் என்ற மறுகாலனியாக்க கொள்கையின் காரணமாகத்தான் அரசு இதனைச் செய்ய மறுக்கிறது. பாட்டில் தண்ணீர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இந்தியாவில் மொத்தம் 1200 இருப்பதாகவும், அவற்றில் 600 தமிழகத்தில்தான் உள்ளன என்றும் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. காசிருப்பவனுக்குத்தான் தண்ணீர் என்ற கருத்தை மக்களே ஏற்கச் செய்யும் அளவுக்கு தண்ணீர் வியாபாரம் தமிழகத்தில் சகஜமாகி விட்டது.

> **அரசாங்கமே தண்ணீர் விற்பது என்பது தண்ணீர் மாஃபியாக்களின் தொழிலுக்கு அம்மா வழங்கும் ஆசி; அரசு வழங்கும் அங்கீகாரம். பல கோடி மக்கள் தாகத்தில் சில நூறு தண்ணீர்க் கொள்ளையர்கள் இலாபம் பார்க்கும் பயங்கரவாதத்துக்கு மக்களைப் பணிந்து போக வைக்கும் சதிச்செயல்.**

அதனால்தான் தண்ணீர் பஞ்சத்தால் தமிழகமே தவித்துக் கொண்டிருக்கும் சூழலிலும், தண்ணீரை உறிஞ்சி விற்பதற்கு முதலாளிகளைச் சுதந்திரமாக அனுமதித்து விட்டு, லிட்டர் பத்து ரூபாய்க்கு பாட்டில் தண்ணீர் விற்பதை விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எனப் பீற்றிக் கொள்கிறார் ஜெயலலிதா. அரசாங்கமே தண்ணீர் விற்பது என்பது தண்ணீர் மாஃபியாக்களின் தொழிலுக்கு அம்மா வழங்கும் ஆசி; அரசு வழங்கும் அங்கீகாரம். பல கோடி மக்கள் தாகத்தில் சில நூறு தண்ணீர்க் கொள்ளையர்கள் லாபம் பார்க்கும் பயங்கரவாதத்துக்கு மக்களைப் பணிந்து போக வைக்கும் சதிச்செயல்.

ஊருக்கு ஒரு இட்லிக் கடை திறப்பதும், காய்கறிக் கடை திறப்பதும், பாட்டில் தண்ணீர் தருவதும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அல்ல. மாறாக, ''கட்டுப்படுத்த முடியாது'' என்று ஒப்புக் கொள்ளும் நடவடிக்கைகள். ''ஏன் கட்டுப்படுத்தவில்லை?'' என்று அரசைக் கேட்கவிடாமல் மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் நடவடிக்கைகள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் பத்து ரூபாய் என்பது, தண்ணீர் தனியார்மயத்தை ஊக்குவிக்கும் சூழ்ச்சி!

● தொரட்டி

# சட்டத்தின் ஆட்சியா? வர்க்கத்தின் ஆட்சியா?

## – சிறுவன் முனிராஜின் மரணம் உணர்த்தும் உண்மைகள்!

**க**டந்த மே மாதம் 23-ஆம் தேதி அதிகாலையில் எம்.பி. குழும நிறுவனத்தின் குலக்கொழுந்து ஷாஜி புருஷோத்தமன் குடிபோதையில் காரை அதிவேகமாகவும் தாறுமாறாகவும் சென்னை - எழும்பூர் பாந்தியன் சாலையில் ஓட்டிவந்து, நடைபாதையோரமாகத் தூங்கிக் கொண்டிருந்தவர்களின் மீது ஏற்றியதில் சிக்கிக் கொண்ட சிறுவன் முனிராஜ் மறுநாள் காலையில் சிகிச்சை பலனளிக்காமல் பரிதாபமாக இறந்து போனான். அச்சிறுவனின் உடம்பில் கார் ஏறி இறங்கியதில் அவனது இடுப்புப் பகுதி முறிந்து போய், உள்ளுறுப்புகளும் சிதைந்து போயிருந்தன.

இது எதிர்பாராதவிதமாக நேர்ந்துவிட்ட சாலை விபத்தல்ல; நண்பர்களோடு சேர்ந்து குடித்து கும்மாளமடித்துவிட்டு, தலைக்கேறிய போதையோடு ஒருவித வெறித்தனமான இன்பத்தை அனுபவிப்பதற்காக நெடுஞ்சாலைகளில் தமது சொகுசுக் காரை அதிவேகமாகவும் தாறுமாறாகவும் ஓட்டிக் கொண்டு போகும் மேட்டுக்குடி கும்பலின் பொறுக்கி கலாச்சாரத்தில் ஊறிப்போன தறுதலை செய்திருக்கும் படுகொலை இது.

இதில் சிக்கிய முனிராஜின் அத்தை மகள் சுபரஷிதா என்ற சிறுமிக்குத் தலைக்காயம் ஏற்பட்டு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவளின் வலது தோள் பட்டை மற்றும் வலது கையின் பல இடங்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதோடு, வலது கை முட்டிப் பகுதி முற்றிலுமாகச் சிதைந்து போய்விட்டது. தற்பொழுது மேல் சிகிச்சைக்காகத் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் இச்சிறுமியின் வலது கை பழைய நிலைக்குத் திரும்பாது என மருத்துவர்கள் கூறுகின்றனர். முனிராஜின் தம்பி வாசு நல்வாய்ப்பாக சிறு காயங்களோடு தப்பிவிட்டான். இவர்கள் தவிர, அந்தப் பேருந்து நிறுத்தத்தில் விளம்பரப் பலகைகளைப் பொருத்திக் கொண்டிருந்த இரண்டு தொழிலாளர்களையும் ஷாஜியின் கார் அடித்துத் தூக்கி எறிந்தது. இந்த இருவரில் ஒருவருக்குப் பலமான காயம் ஏற்பட்டு, அவர் பல நாட்கள் உள்நோயாளியாக மருத்துவ சிகிச்சை எடுக்க நேரிட்டது.

ஷாஜியின் கார் ஏறி இறங்கியதில் கொல்லப்பட்ட சிறுவன் முனிராஜ்; மகனை இழந்து வாடும் பெற்றோர் தியாகு மற்றும் மாலினி.





கொல்லப்பட்ட முனிராஜும், படுகாயமடைந்துள்ள சுபரஷிதாவும் ஏழைகள்; சாதாரண ஆட்டோ ஓட்டுநர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பென்ஸ் இரக சொகுசுக் காரை ஓட்டி வந்த தறுதலை ஷாஜி புருஷோத்தமன் வருடத்திற்கு 2,000 கோடி ரூபாய் வருமானம் வரத்தக்க மிகப்பெரும் தரகு முதலாளித்துவ குடும்பத்தைச் சேர்ந்த வாரிசு. அதனாலேயே சென்னை போலீசு வழக்கைப் பதிவு செய்தது தொடங்கி ஷாஜியைக் கைது செய்தது முடிய

அனைத்து நிலைகளிலும் வர்க்கப் பாசத்தோடு நடந்து கொண்டது.

ஷாஜி ஓட்டி வந்த கார் நடைபாதையில் தூங்கிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது ஏறி இறங்கி ஒரு ஆட்டோவில் மோதி நின்றவுடனேயே, 50-க்கும் மேற்பட்ட பொது மக்கள் காரினுள் போதையோடு இருந்த ஷாஜி உள்ளிட்ட நால்வரையும் வெளியே இழுத்துப் போட்டு போலீசாரிடம் ஒப்படைத்தனர்; ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்த ஷாஜியை ரமேஷ் என்பவர் தான் வெளியே இழுத்துப் போட்டிருக்கிறார்.



கொச்சி விமான நிலையத்தில் தமிழகப் போலீசால் கைது செய்யப்பட்டுக் கண்ணியமாக அழைத்து வரப்படும் ஷாஜி.

இத்துணை நேரடி சாட்சியங்கள் இருந்தபோதும் அண்ணா சதுக்கம் போக்குவரத்து போலீசு ஆய்வாளர் ரவிச்சந்திரன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நால்வரில், ஷாஜியையும் அவனது இரண்டு நெருக்கமான நண்பர்களையும் விருந்தினர்களைப் போல வழியனுப்பி வைத்துவிட்டு, ஷாஜியோடு காரில் பயணம் செய்த குமாரை ஷாஜி வீட்டு கார் ஓட்டுநராகக் காட்டி, அவர் மீது பிணையில் வெளியே வரத்தக்க ஒரு வழக்கைப் பதிவு செய்து, சிறையில் அடைத்தார்.

மே 24 அன்று சிறுவன் முனிராஜ் இறந்து போகிறான். போலீசால் வழியனுப்பி வைக்கப்பட்ட ஷாஜி தலைமறைவாகிறான். இதனிடையே, ''கைது செய்யப்பட்ட குமார் ஷாஜி வீட்டு கார் ஓட்டுநர் கிடையாது; அவர் நெல்லூரிலுள்ள ஷாஜியின் குதிரைப் பண்ணையில் வேலை செய்துவருபவர்'' என்ற உண்மையை இந்து நாளிதழ் அம்பலப்படுத்தியது. இது மட்டுமின்றி, ''ஷாஜி தினந்தோறும் தனது நண்பர்களோடு குடித்துவிட்டு, இரவு நேரங்களில் சொகுசு கார்களை அதிவேகத்தோடு ஓட்டிச் செல்வதைப் பொழுதுபோக்காகக் கொண்டவன்; இதற்கு முன்பு அவனால் இரண்டு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன; அதில் ஒரு விபத்தில் ஷாஜி ஓட்டிச் சென்ற கார் ஒரு ஆட்டோ மீது மோதியதில் ஆட்டோ ஓட்டுநர் பலியாகிவிட்டார். அவனது கார் ஓட்டுநர் உரிமமும் காலாவதியாகிப் போன ஒன்று'' என்ற உண்மைகளும் வெளிச்சத்துக்கு வந்தன. மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சென்னை கிளை போலீசின் மோசடியை அம்பலப்படுத்திச் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொண்டது.

உண்மையை இதற்கு மேலும் மூடிமறைக்க முடியாமல் போனதால், ஷாஜியை முதல் குற்றவாளியாகப் போலீசு அறிவித்தது. போலீசு ஆய்வாளர் ரவிச்சந்திரன் இடைநீக்கம் செய்யப்பட்டார். அந்த ஆய்வாளர் தன்னிச்சையாக இந்த மோசடியைச் செய்தாரா அல்லது மேலதிகாரிகளின் அறிவுரைப்படி நடந்து கொண்டாரா என்பது இனி எக்காலத்திலும் வெளிவராது. ரவிச்சந்திரனுக்கு அடுத்து, இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட சரவணன், ஒருசில நாட்களிலேயே மயிலாடுதுறைக்கு மாற்றப்பட்டதற்கான காரணமும் மர்மமாகவே உள்ளது.

ஷாஜி பணபலம் மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் மட்டுமல்ல; அரசியல் செல்வாக்கும் கொண்டவன். மத்திய அமைச்சர் வயலார் ரவி, ஷாஜியின் சகோதரியின் மாமனார். இத்தகைய பின்னணி கொண்ட ஷாஜி எளிதாக வெளிநாட்டுக்குத் தப்பியோடி விடுவான் எனத் தெரிந்திருந்தும் சென்னை போலீசு அதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு கண்துடைப்புக்காக ஷாஜியைப் பற்றிய விவரங்களை சென்னை விமான நிலைய குடியேற்ற அதிகாரிகளிடம் மட்டுமே தெரிவித்திருந்தது, சென்னை போலீசு. ஆனால், ஷாஜியோ பெங்களூர் விமான நிலையத்திலிருந்து இலங்கை வழியாக தாய்லாந்திற்குத் தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஒரு சாதாரண பின்னணி கொண்ட குற்றவாளியைப் பிடிக்க வேண்டும் என்றால், அவனது குடும்பத்தையே போலீசு நிலையத்திற்குக் கடத்தி வந்து மிரட்டுவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கும் போலீசு, ஷாஜி விசயத்தில், அவனைச் சரணடையச் சொல்லுமாறு அவனது தந்தை புருஷோத்தமனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தது. ஷாஜி சரணடைவது உறுதியான சமயத்தில் தான் சென்னை போலீசு இந்தியாவின் அனைத்து விமான நிலையங்களுக்கும் அவனைப் பற்றிய விவரங்களை அனுப்பியதோடு, நீதிமன்றத்தின் மூலம் ஷாஜியைத் தேடப்படும் குற்றவாளியாகவும் அறிவித்தது. காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாக, ஷாஜியை கொச்சி விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்தது.

ஒரு எதிர்பாராத விபத்து நடந்தாலே, அது பற்றி அறிக்கைவிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கும் ஓட்டுக்கட்சிகளுள் ஒன்றுகூட, இந்த வழக்கில் பாதிக்

கப்பட்டவர்களுக்கு ஆதரவாக வாய் திறக்கவில்லை. குறிப்பாக, ஜெயா அரசு பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஒரு பைசாகூட நிவாரண உதவி அளிக்க முன்வரவில்லை. இந்த விசயத்தில் நீதிமன்றங்களுக்கும் தார்க்குச்சி போட வேண்டியிருந்தது.

''உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் சுபரஷிதாவின் மருத்துவச் செலவுக்குத் தமிழக அரசு ஐந்து இலட்சம் ரூபாய் அளிக்க வேண்டும்; அத்தொகையைக் குற்றவாளி ஷாஜியிடமிருந்து வசூலிக்க வேண்டும்'' எனக் கோரி மனித உரிமைப் பாதுகாப்பு மையம் உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்குத் தொடர்ந்த பிறகுதான், எம்.பி. குழும முதலாளி புருஷோத்தமன் மருத்துவச் செலவை ஏற்றுக் கொள்வதாக உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார். தனக்கு முன்பிணை வழங்கக் கோரி ஷாஜி வழக்குத் தொடர்ந்த பொழுது, ''குற்றத்தின் தன்மை மற்றும் குற்றவாளியின் செல்வாக்கைக் கருத்தில்கொண்டு, முன்பிணை வழங்கக்கூடாது'' எனக் கோரும் குறுக்கீட்டு மனுவையும் தாக்கல் செய்தது, மனித உரிமைப் பாதுகாப்பு மையம்.

ஷாஜி சகலவிதமான வசதிகளோடு முதல் வகுப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறான். அவனது இரண்டு நண்பர்கள் பிணையில் வெளியே வந்துவிட்டனர். பணம் விளையாடிவிட்டதோ எனச் சந்தேகப்பட இதில் இடமில்லை. தனது களிவெறியாட்டத்திற்காக ஒரு சிறுவனைக் கொன்று போட்ட இவ்வழக்கை வெறும் விபத்தாகவே நீதிமன்றமும் சட்டமும் கருதுகின்றன. போலீசு ஷாஜியைச் சட்டவிரோதமாகத் தப்ப வைக்க முயன்றது என்றால், சட்டமும் நீதிமன்றமும் ஷாஜியைச் சட்டப்படியே கொலைக்குற்றத்திலிருந்து தள்ளி நிறுத்தியுள்ளன.

● ரஹீம்

# "ஓசூரில் சட்டவிரோத லே - ஆஃப்களை முறியடிப்போம்! ஆட்குறைப்பு, ஆலைமூடல் சதிகளைத் தகர்த்தெறிவோம்!!"

## - பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டம்

ஓசூரில் இலாபத்துடன் இயங்கி வரும் அசோக் லேலண்ட் ஆலையில் தற்போது லே-ஆஃப், ஆட்குறைப்பு முதலான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் தொழிலாளர்கள் ஏற்கெனவே பெற்றுவந்த சம்பளத்தைக் கூட முழுமையாகப் பெற முடியவில்லை. மேலும், தொழிற்தகராறு சட்டப்படியோ,தொழிலாளர் துறை இணை ஆணையரிடம் ஒப்புதல் பெறப்பட்டோ இந்த லே-ஆஃப் அறிவிக்கப்படவில்லை.




ஓராண்டில் முடிக்கப்பட வேண்டிய ஒன்றேகால் இலட்சம் தானியங்கி வண்டிகளை ஒன்பதே மாதங்களில் அசோக் லேலண்ட் செய்து முடித்துவிட்டது. நிரந்தரத் தொழிலாளிகளிடம் வேலை கொடுத்தால் கூடுதல் செலவாகும் என்று சட்டவிரோதமாக ஒப்பந்தத் தொழிலாளர்களையும் பயிற்சித் தொழிலாளர்களையும் கொண்டு குறைந்த கூலியில் அவுட்சோர்சிங், காண்டிராக்ட், ஏ.எல்.டி.எஸ்., லாஜிஸ்டிக்ஸ் என பல்வேறு வழிகளில் உற்பத்தியைப் பெருக்கியுள்ள நிர்வாகம், சந்தையில் தேக்க நிலை இருப்பதால் வேறுவழியின்றி லே-ஆஃப் அறிவித்துள்ளதாக நியாயவாதம் பேசி, நிரந்தரத் தொழிலாளிகளைப் படிப்படியாக வீதியில் வீசியெறியத் துடிக்கிறது.

இதேபோல் கமாஸ் வெக்ட்ரா ஆலையில் 13 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, லே-ஆஃப் அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் காட்டி எக்சைடு, கார்போரண்டம் முதலான ஆலை நிர்வாகங்கள் லே-ஆஃப் அறிவிக்கப் போவதாக நிரந்தரத் தொழிலாளர்களை மிரட்டி வருகின்றன. குறைந்த கூலிக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு சட்டவிரோதமாக உற்பத்தியை நடத்தத் துடிக்கின்றன.

இச்சட்டவிரோத லே-ஆஃப்களை முறியக்க அறைகூவியும், எதிர்வரவிருக்கும் ஆட்குறைப்பு, ஆலை மூடல் முதலான முதலாளித்துவ சதிகளைத் தகர்தெறிய தொழிலாளர் வர்க்க ஒற்றுமையைக் கட்டியமைக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியும், ஓசூரில் துண்டுப் பிரசுரங்கள் - சுவரொட்டிகள் வாயிலாக தெருமுனைகளிலும் ஆலை வாயில்களிலும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் தோழர்கள், அதன் தொடர்ச்சியாக ஜூன் 15 அன்று மாலை ராம்நகர் அண்ணா சிலை அருகே விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பு.ஜ.தொ.மு. கமாஸ்வெக்ட்ரா கிளைச் சங்கத் தலைவர் தோழர் செந்தில் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், பு.ஜ.தொ.மு. மாவட்டத் தலைவர் தோழர் பரசுராமன், செயற்குழு உறுப்பினர் தோழர் சின்னசாமி ஆகியோர் ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து, நிரந்தரத் தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை முறியடிக்க, தொழிலாளர் ஒற்றுமையைக் கட்டியமைக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி எழுச்சியுரையாற்றினர்.

- பு.ஜ. செய்தியாளர், ஓசூர்.

## சிதம்பரம் வீனஸ் பள்ளி:

# கட்டணக் கொள்ளைக்கு எதிராகத் தொடரும் பெற்றோர் போராட்டம்!

**சி**தம்பரம் வீனஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் ஒரு மாணவி மாநிலத்தில் முதலிடம் பெற்றுள்ளதை வைத்துப் பள்ளி முதலாளி வீனஸ் குமார், கட்டணத்தைப் பலமடங்கு உயர்த்தி பகற்கொள்ளையில் இறங்கியுள்ளார். இதைக்கண்டு குமுறிய பெற்றோர்கள், அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே செலுத்துவோம் என்று மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், சிதம்பரம் உதவி ஆட்சியருக்குப் புகார் அனுப்பி, மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்தின் தலைமையில் போராடத் தொடங்கினர்.

இதையொட்டி சிதம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 7.6.2013 அன்று முத்தரப்பு பேச்சு வார்த்தை நடந்தபோது, இப்பள்ளியில் அரசு நிர்ணயித்த கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது என்று கூசாமல் புளுகினார், வீனஸ் பள்ளி முதலாளியின் காரில் வந்திறங்கிய மெட்ரிக் பள்ளி ஆய்வாளர். சமச்சீர் பாடம் வந்த பிறகும் புத்தகத்துக்கு ரூ. 2000 வசூலிக்கிறார்கள் என்று முறையிட்டபோது, ''நாங்கள் எக்ஸ்ட்ரா ஆங்கிலப் புத்தகம் கொடுக்கிறோம்'' என்று பள்ளி முதலாளி கூற, அதை உதவி ஆட்சியரும் வழிமொழிந்தார்.

பின்னர் பெற்றோர் சங்கத்தினர் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தையும், வீனஸ் பள்ளி முதலாளி வசூலிக்கும் கூடுதல் கட்டணத்தையும் விளக்கி சுவரொட்டி மூலம் பிரச்சாரம் செய்ததால், இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர்கள் 10.6.2013 அன்று பள்ளி திறக்கப்பட்ட போது பெருந்திரளாகக் குவிந்தனர். ஆத்திரமடைந்த வீனஸ் பள்ளி முதலாளி அனைத்து ஓட்டுக்கட்சிப் பிரமுகர்களையும் அவர்களது அடியாட்களுடன் குவித்தார். திரண்டிருந்த பெற்றோரை இக்குண்டர்கள் மிரட்டியதோடு, பெற்றோர் சங்க நிர்வாகிகளைக் கேவலமாகப் பேசி வம்புக்கிழுத்து தாக்க முயற்சித்தனர். அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே செலுத்துவதாக கூறிய சில பெற்றோர்களைக் குறிவைத்து, அவர்களது குழந்தைகளுக்கு டி.சி. கொடுத்தது வெளியேற்றியது, இப்பள்ளி நிர்வாகம்.

இந்த அட்டூழியத்தையும் அடியாட்களின் மிரட்டலையும் பற்றி மாவட்ட ஆட்சியர், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி - என பலரிடமும் பெற்றோர்கள் புகார் கொடுத்தபோதிலும், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நழுவிக் கொண்டுள்ளனர். பல பெற்றோர்களுக்குக் கொலைமிரட்டல் வந்துள்ளதை விளக்கி வீனஸ் பள்ளி முதலாளி மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், பெற்றோர் சங்கத்தின் சிதம்பரம் கிளையின் முன்னணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு தருமாறும் மாவட்ட போலீசு உதவிக் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் வீனஸ் பள்ளி முதலாளியின் பகற்கொள்ளையை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தக்கூட தொடர்ந்து அனுமதி மறுத்து வருகிறது போலீசு.

இதேபோல, சிதம்பரம் அருகேயுள்ள சேத்தியாத் தோப்பு எஸ்.டி.எஸ். மெட்ரிக் பள்ளியில் பல மடங்கு கட்டணம் வசூலிப்பதோடு, சுமாராகத்தான் படிக்கிறார் என்று காரணம் கூறி மாணவர்களிடம் ''அன்குவாலிபைடு பீஸ்'' என்ற பெயரில் ரூ. 4000 வீதம் கடந்த ஆண்டில் வசூலித்துள்ளனர். இப்பகற்கொள்ளையை அம்பலப்படுத்தி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பெற்றோர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரியதை மறுத்த போலீசு, முன்னணியாளர்களை வெளிப்படையாகவே மிரட்டியுள்ளது.

தனியார் பள்ளி முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு எதிராக சட்டரீதியாகப் போராடக்கூட தடை விதித்து முன்னணியாளர்களை மிரட்டுகிறது, போலீசு. கல்வித்துறை அதிகாரிகளோ நழுவிக் கொள்கின்றனர். கல்வி வியாபாரிகளோ அடியாட்களைக் கொண்டு அச்சுறுத்துகின்றனர். கள்ளச் சாராயம் விற்கும் ரவுடிகளைக் காட்டிலும் இழிவான, இரக்கமற்ற வழிப்பறிக் கொள்ளையர்களே தனியார் பள்ளி முதலாளிகள் என்பதை பெற்றோர்கள் தம் சொந்த அனுபவத்தில் உணர்ந்து வருகின்றனர். கொள்ளையர்களைப் பணிய வைப்பதற்குப் பொருத்தமான போராட்ட முறைகளில் மாணவர்களும் பெற்றோரும் இறங்க வேண்டும் என்பதையே அனுபவங்கள் காட்டுகின்றன.

-பு.ஜ. செய்தியாளர், சிதம்பரம்.

வீனஸ் பள்ளி நிர்வாகத்தின் கட்டணக் கொள்ளை மற்றும் ரவுடித்தனத்திற்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தைப் பெற்றோர்களின் மத்தியில் விளக்கி நடத்தப்பட்ட கூட்டம்.



# எதிர்கொள்வோம்!

**இணையத்தின் மூலமாகவும் நேரடியாகவும் எமது தோழர்களிடம் எழுப்பப்படும் கேள்விகள், வைக்கப்படும் விமர்சனங்களைத் தொகுத்து அவற்றுக்குத் தக்க பதிலளிக்கும் பகுதி.**

''ஈழத் தமிழர்களால் ஒருமனதாக ஏற்கப்பட்ட தமிழீழத்தை ம.க.இ.க. வினர் மட்டும் ஏற்க மறுப்பது ஏன்? தனி ஈழத்தை ஏற்க மறுக்கும் ம.க.இ.க.வினரைத் தமிழீழத்தின் எதிரி என்று ஏன் கருதக்கூடாது?'' என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

அந்தக் காலத்தில் தமிழக அரசர்கள் பார்ப்பனர்களுக்கு ''பிரம்மதேயங்கள்'' என்ற பெயரில் சில கிராமங்களை எழுதி வைத்தார்கள். அதைப் போல, தமிழகத்தை ஜெயலலிதாவுக்கு எழுதிவைத்து விட்டுப் போன பாசிச வக்கிரக் கோமாளி அரசியல் தலைவர் எம்.ஜி.ஆர். மீது சில பொய்த் தோற்றங்கள் இங்கே திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதி, சௌந்தரராசன் பாடி, எம்.ஜி.ஆர். வாயசைத்த பாடல்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். சிந்தனைகள் என்ற பச்சையான பொய்யைப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் நுழைத்து அதிகாரபூர்வமாக இளைய தலைமுறைக்குப் பதிய வைக்கிறார்கள்.

அதைப் போல, ஈழத்து எம்.ஜி.ஆர். பிரபாகரன் மற்றும் ஈழம் குறித்துப் பல கற்பிதங்களும், பொய்த் தோற்றங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் ம.க.இ.க., புதிய ஜனநாயகம், பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு. மற்றும் இவற்றின் தோழமை அமைப்புகள் தமிழீழத்தை ஏற்காதவர்கள், தமிழீழத்திற்கு எதிரானவர்கள் என்று இனவாதிகளால் அவதூறு செய்யப்படுவது.

''தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு 60 ஆண்டு வரலாறு உண்டு; 30 ஆண்டுகள் ஈழத் தந்தை செல்வநாயகம், பெரியவர் ஜி.ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் அமைதிவழிப் போராட்டம்; அதன் பிறகு தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம்'' என்று வரலாறு சொல்லுகிறார்கள்.

இந்த 60 ஆண்டுகளிலும் தமிழீழம் என்ற கருத்தாக்கத்திற்கு அதன் மேற்படிக் கர்த்தாக்களுக்கே ''தனித் தமிழீழம்தான்'' என்ற ஒற்றையான பொருள் இருந்ததே கிடையாது. இதை எம்மால் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும். பிரபாகரன் கூட, தனித் தமிழீழம் கோரிக்கையைக் கைவிட்டு, ''தமிழீழம்'' என்பதற்கு வேறு பட்ட பொருள்கள் கூறிய தருணங்கள் உண்டு; இதையும் எம்மால் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும்.

1985 திம்புப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் உட்பட ஐந்து போராளி அமைப்புகள் முன்வைத்த கோரிக்கைகளில் ''தமிழீழம்'' கிடையாது! ''இலங்கையில் வாழும் தமிழர்களை ஒரு தனி தேசிய இனமாக அங்கீகரிப்பது; அவர்களுக்குத் தாய்நாடு ஒன்றை அங்கீகரிப்பது; தமிழ் தேசத் தன்னுரிமையை அங்கீகரிப்பது; இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை யையும் அடிப்படை உரிமையையும் அங்கீகரிப்பது'' — ஆகிய ஐந்து கோரிக்கைகளே முன்வைக்கப் பட்டன. இந்த ஐந்து கோரிக்கைகளையும் எமது அமைப்புகள் எப்போதும் உறுதியாக ஆதரித்து வந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் முன்னோடிகளான ஈழத்தின் பிற்போக்கு வலதுசாரித் தலைமை:
(இடமிருந்து) செல்வநாயகம், அமிர்தலிங்கம் மற்றும் ஜி.ஜி.பொன்னம்பலம். (கோப்புப் படம்)







ஆனால், 1987 ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் பின்பு வடகிழக்கில் அமைய விருந்த இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுக்குப் பெரும்பான்மை இடங்களை வழங்கி புலிகளின் பிரதி நிதியை முதல்வராக்கி, புலிகளின் செலவீனங்களுக்காக மாதாமாதம் ஐந்து மில்லியன் ரூபாய்களை வழங்கினால், ''தமிழீழ''க் கோரிக்கையைக் கைவிடுவதற்கும் ஒப்புக் கொண்டார்கள். (இதன்படி முதற்கட்டமாக ஐந்து மில்லியன் ரூபாய்களைப் புலிகள் பெற்றுக் கொண்டார்கள்.) சந்திரிகா இலங்கை அதிபராகிய பிறகு நடந்த போர்நிறுத்தம், அமைதிப் பேச்சுவார்த்தையின்போது தமிழீழத் தன்னுரிமைக்குப் புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆன்ரன் பாலசிங்கம் ''மாநில சுயாட்சி'' என்ற புதிய வியாக்கியானம் கொடுத்தார்.



பூடான் தலைநகர் திம்புவில் 1985-ஆம் ஆண்டு ஈழப் பிரச்சினை குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தை. (கோப்புப் படம்)

தமிழீழ விடுதலைக்கான முதல் 30 ஆண்டுகால அமைதிவழிப் போராட்ட காலத்தில் அதற்குத் தலைமையேற்றதாகக் கூறப்படும் ஈழத் தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியும், பெரியவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரசுக் கட்சியும் இணைந்து நிறுவிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதை எவ்வாறு வழி நடத்தின? உண்மையில் அது தமிழீழ விடுதலைக்கானதுதானா?

ஈழத் தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியும், பெரியவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பலவகையிலும் தமிழ்நாட்டின் திராவிட கட்சிகளைப் போலவே அரசியல் பிழைப்புவாதத்தில் மூழ்கிக் கிடந்தவைதாம். தமிழ்நாட்டின் திராவிடக் கட்சிகளாவது பெரியார், பகுத்தறிவு, சுயமரியாதை, பெண்விடுதலை போன்ற முற்போக்குப் பாரம்பரியங்களைக் கொண்டவை. ஆனால், அத்தகைய பாரம்பரியம் இல்லாத அவ்விரு ஈழத்துப் பிற்போக்கு கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு ஆளும் சிங்கள இனவெறிக் கட்சிகளுடன் மாறிமாறிக் கூட்டணி அமைத்துக் கொண்டு, அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டவைதாம். இவ்விருகட்சிகளுமே இலண்டன் உயர்கல்வி பயின்ற, வடக்கின் ஒடுக்கப்பட்ட சாதிகளையும் கிழக்கின் மக்களையும் கீழானவர்களாகக் கருதும் யாழ் மையவாத, யாழ்ப்பாண ஆதிக்க வேளாள சாதித் தலைமையைக் கொண்ட கட்சிகள்தாம்.

இக்காரணங்களால் இவற்றுக்கு வவுனியாவிற்குத் தெற்கே தமது வர்க்க நலன்களையும் தமது சொந்தத் தொழிலையும் கொழும்பில் குவித்திருந்த தலைமையினரின் செல்வத்தையும் பாதுகாக்க ஒரு அரசியலும், வவுனியாவிற்கு வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களிடம் ஓட்டுப் பொறுக்குவதற்காக மட்டுமே தமிழ்த் தேசிய அரசியலும் தேவைப்பட்டன. அதற்கேற்பவே இவ்விரண்டு கட்சிகளும் தமிழீழச் சிக்கலைக் கையாண்டன.

1972-இல் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டம் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் அனைத்தையும் பறித்து அவர்களை அடிமைகளாக்குவதாக அமைந்ததால், தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரசுக் கட்சி மற்றும் இலங்கைத் தொழிலாளர்கள் காங்கிரசு ஆகிய முக்கிய தமிழர் கட்சிகள் எல்லாம் இணைந்து தமிழர் ஐக்கியக் கூட்டணியை ஏற்படுத்தின. அப்போதும்கூட தமிழீழம் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. வடக்கு-கிழக்கு மாநிலங்களை ஐக்கியப்படுத்தி ஈழத்தை ஒரே மாநிலமாக்கி ஒரு கூட்டாட்சி முறையை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அக்கூட்டணியின் கோரிக்கையாக இருந்தது. (செல்வநாயகம் தலைமையிலான கட்சியின் பெயரே ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி (Federal party) தான்; தமிழில்தான் ''தமிழரசுக் கட்சி'' - என்ன ஒரு மோசடி!)

''1958 முதல் 1977 வரையிலும் ஏறத்தாழ இருபது ஆண்டுகள், தமிழர்கள் இலங்கையில் சிங்களருடன் இணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கையில் தமது சம உரிமைக்கான கோரிக்கைகளை அமைதிவழியில் வலியுறுத்தி வந்தனர். அமைதிவழியில் போராட்டங்களையும் நடத்தினர். இணைந்து ஒரே நாட்டில் வாழ்வதற்கான தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர். இடைக்கால சமரச ஒப்பந்தங்களுக்கும் இணைங்கினர்'' என்று புலிகள் ஆதரவு குழுக்கள் பலவும் ஒப்புக் கொள்கின்றன.



இந்தியா-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு ஒரு வாரம் முன்னதாக, அது குறித்து டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் (இடமிருந்து) அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அ.தி.மு.க.வின் பண்ருட்டி ராமச்சந்திரன், விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், (கோப்புப் படம்)

1976 யாழ்ப்பாணம்-வட்டுக்கோட்டை மாநாட்டில் தான் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்று பெயர்சூட்டிக்கொண்டு, ''தமிழீழத் தனியரசு'' நிறுவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் மலையகத் தமிழரின் ஆதரவு பெற்ற இலங்கைத் தொழிலாளர்கள் காங்கிரசு கூட்டணியிலிருந்து விலகியது.) ''தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி எதிர்வரும் 1977-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசிய இனத்தின் திட்டமான முடிவை சிங்கள அரசாங்கத்திற்குப் பிரகடனப்படுத்துவதற்குரியது என்றே கணிக்கிறது'' என்று மட்டுமே அத்தீர்மானம் கூறியது. அதற்குமேல், ''தமிழீழத் தனியரசை'' எவ்வாறு அடைவது என்பதை மாநாட்டிலோ, பிறகோ அக்கூட்டணி அறிவிக்கவே யில்லை. அதற்கான முயற்சியில் ஈடுபடவுமில்லை.

''வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிதான் ஈழத் தேசிய இயக்கத்தின் அடிப்படை. அதற்கான ஜனநாயகக் கட்டளைதான் 1977 தேர்தல் முடிவு. தமிழீழத்துக்கு ஈழத் தமிழர்கள் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தனர்'' என்று புலி ஆதரவாளர்கள் தொடர்ந்து கதைத்து வருகின்றனர். ஆனால், உண்மையோ வேறுவிதமாக அமைந்தது.

தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் கூட்டணி அமைத்து 1977 தேர்தல்களில் போட்டியிட்டபோதும் வடக்கில் 41 விழுக்காடு வாக்குகளும் கிழக்கில் வெறும் 26 விழுக்காடு வாக்குகளுமே கிடைத்தன. மொத்தத்தில் தமிழீழப் பகுதியில் 35 விழுக்காடுக்கும் குறைவான வாக்குகளையே கூட்டணியினர் பெற்றனர். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் யாழ் மையவாத, ஆதிக்கசாதி, முற்போக்கு-கம்யூனிச எதிர்ப்புக் கொள்கைகள் காரணமாக கிழக்கு மாகாண மக்கள், சிறுபான்மை இசுலாமிய மக்கள் மற்றும் ஈழத்தில் 30 விழுக்காடுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதரவை இக்கூட்டணி பெறமுடியவில்லை. (இதன் காரணமாகவே தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர்களான அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும் முந்தைய தேர்தலில் தோற்கடிக்கப் பட்டனர்). ஆக, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தமிழீழத்துக்குச்சற்று ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு ஈழத் தமிழர்களே ஒப்புதல் அளித்தனர். வட்டுக்கோட்டைத் தீர்மானம் மூலம் தமிழீழத்தை முன்நிறுத்துவதற்கு முன்பேகூட, அவ்விரு கட்சிகளும் இதே அளவு வாக்குகளைத்தான் பெற்றிருந்தன. ஆகவே, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமையிலான தமிழீழத்துக்கு ஈழத் தமிழர்கள் ஒப்புதல் அளிக்கும் ஜனநாயகக் கட்டளைதான் 1977 தேர்தல் முடிவுதான் என்பது தவறு. அதையே பிரபாகரன்-விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழீழத்துக்கான ஈழத் தமிழர்களின் ஒப்புதலாகக் கொள்வதும் தவறு.

1977 தேர்தல்களுக்குப் பிறகு நியமன உறுப்பினர்கள் உட்பட 18 பேர்களோடு இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சியாகியது, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி. அது தமிழீழத்திற்காக எதுவும் செய்யவில்லை. செல்வநாயகத்தின் மருமகனும் கனடாவுக்குப் புலம் பெயர்ந்த பேராசிரியரும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அடிவருடியுமான ஏ.ஜே.வில்சனைத் தரகராகக் கொண்டு ஜெயவர்த்தனேவுடன் இரண்டாண்டுகள் பேரங்கள் நடத்தியது. முடிவில் தமிழீழத் தனியரசு அமைப்பதாகப் புறப்பட்ட கூட்டணி மாவட்ட அபிவிருத்தி சபைச் சட்டத்தைப் பெற்றது. அதன்படி 1981-இல் நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தலில் சிங்கள இனவெறி அரசு அப்பட்டமான முறைகேடுகளிலும் அராஜகங்களிலும் ஈடுபட்டது. அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாண நூலகத்தைக் கொளுத்தி அழித்தது. தொடர்ந்துவந்த அவசரநிலைப் பிரகடனம், பயங்கரவாதச் சட்ட ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ள முடியாமல் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமை இந்தியாவுக்கு ஓடிப்போனது. இதுதான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் 30 ஆண்டு கால வரலாறு.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி தலைமையிலான அமைதி வழித் தமிழீழப் போராட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியாக பிரபாகரன் - விடுதலைப் புலிகளின் தலைமையிலான ஆயுதப் போராட்ட வழித் தமிழீழம் ஆகிய இரண்டு மட்டுமே ஈழத்தில் நிலவியதாக இங்கே புலி விசுவாசிகள் புளுகி வருகிறார்கள். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, அதன் முன்னோடியான தமிழர் ஐக்கியக் கூட்டணி ஆகிய இரண்டுமே முன்னெடுத்த அரசியல் ஈழத் தமிழர் விடுதலைக்கானது அல்ல என்று புரிந்து கொண்ட இளைஞர்களால் வேறொரு வகையான அரசியல் உள்ளடக்கம் கொண்ட தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

1970-களின் ஆரம்பத்தில் தமிழ் இளைஞர் பேரவையாகத் தொடங்கிய அவர்கள், சோசலிசத் தமிழீழம் என்ற கோரிக்கையை முன்னெடுத்தனர். வர்க்க ஒடுக்குமுறையற்ற, சாதி-மதமற்ற, ஜனநாயகத் தமிழ் ஈழமே அதன் இலக்காக இருந்தது. உள்ளடக் கத்தில் பல போதாமைகளையும் குறைபாடுகளையும் கொண்டிருந்தபோதும், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வலதுசாரி பிற்போக்குத் தமிழீழத்தைவிட இது முற்போக்கானது; மாறுபட்டது. அந்த இளைஞர்கள் முன்வைத்த இடதுசாரி-முற்போக்கு முழக்கங்கள்தாம் பெரும்பாலான இளைஞர்கள் களையும் மாணவர்களையும் தேசியக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து விலகித் தமிழீழப் போராட்டத்தை நோக்கி வர வைத்தன.

பிரபாகரனும் விடுதலைப் புலிகளும்கூட ''சோசலிசத் தமிழீழத்தை நோக்கி'' என்றொரு நூலை வெளியிட்டார்கள். ஆனால், அது பிற்காலத்தில் இலண்டனிலிருந்து அன்ரன் பாலசிங்கம் எழுதிக் கொடுக்க, பிரபாகரன் ஒரு உத்திக்காக மட்டும் உச்சரித்ததுதான். தாங்கள் ஒரு உத்தியாகவே சோசலிசக் கருத்தாக்கங்களை உச்சரித்தோம் என்று பின்னாளில் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பாலசிங்கம் தனது 'த வில் டு ஃபிரீடம்' (The Will to Freedom) நூலில் ஒப்புக்கொண்டிருக்கிறார். ''தமிழீழத்தின் பொருளாதாரக் கொள்கை திறந்த பொருளாதாரக் கொள்கையே'' என்று பிரபாகரனே வன்னி பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார். பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சோழப் பேரரசும் புலிக்கொடியும் கனவாகக் கொண்ட குறுந்தேசிய, வலதுசாரித்தமிழீழம் தான் இலக்காக இருந்தது.

இலங்கையில் 1970-களில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து, அந்நாட்டின் இரு ஆளும் கட்சிகளும் மாறிமாறி சிங்களப் பேரினவாதத்துக்குத் தீனி போடவும், அவர்களின் ஆதரவை வளைத் துப் போடவும், ஈழ மற்றும் மலையகத் தமிழர் மீதான ஒடுக்கு முறைகளையும் சீண்டல்களையும் தீவிரப் படுத்தின. தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி செய்வதறியாது, மேலும் சமரச பேரங்களில் இறங்கியது. அதன் மீது நம்பிக்கை இழந்த போர்க்குணமிக்க இளைஞர்களும் மாணவர்களும் ஆயுதப் போராட்டங்களில் குதிக்கத் தீர்மானித்தனர். இடதுசாரி சாயலைக் கொண்ட ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல். எஃப்., புளோட் மற்றும் வலதுசாரி அரசியலைக் கொண்ட புலிகள், டெலோ — இவை இரண்டிலிருந்தும் மாறுபட்ட பொதுவுடைமை அரசியலைக் கொண்ட என்.எல்.எஃப்.டி. ஆகிய போராளிக் குழுக்கள் தோற்றமெடுத்தன. தமிழீழத்துக்கான இவற்றின் அரசியல் உள்ளடக்கம், ஆயுதப் போராட்ட வழிமுறை வெவ்வேறாக இருந்தன.

என்.எல்.எஃப்.டி. தவிர, பிற போராளிக் குழுக்களை அரவணைத்து இந்திய அரசு ஆயுதங்களும் பணமும் பயிற்சியும் கொடுக்கத் தொடங்கிய பிறகு, தமிழீழக் கருத்தாக்கத்துக்கு இன்னொரு விரும்பத்தகாத பரிமாணம் உருவானது. அதாவது, தமிழீழக் கருத்தாக்கத்தை இப்போது இந்திய உளவு அமைப்பான ''ரா'' அதிகாரிகள் வரித்துக் கொண்டு, போராளிக் குழுக்களை வழிநடத்தத் தொடங்கினார் கள். ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளோட் ஆகிய போராளிக் குழுக்கள் இதுவரைதாம் சொல்லிக் கொண்ட இடதுசாரிச் சித்தாந்தங்களைப் பகிரங்க மாகவே கைவிட்டன. விடுதலைப் புலிகளுக்கு அப்படி இழப்பதற்கு எதுவுமில்லை. ஆனால் அவர்களுக்கு ''தமிழீழ சோழப் பேரரசை'' மீண்டும் அமைக்கும் கனவிருந்தது.

இந்திய அரசின் தயவால் போராளிக் குழுக்கள் பணபலம், ஆள்பலம், ஆயுதபலத்தைப் பெருக்கி கொண்டிருந்த அதேவேளையில், அவை தனித்தனி அதிகார மையங்களாகவும் மாறத் தொடங்கின. ஒவ்வொரு தமிழீழப் போராட்டக் குழுவின் தலைவரும் முற்போக்கு அரசியலைத் துறந்து குட்டிக் குட்டி யுத்தப் பிரபுக்களாகக் குறுகிப் போனார்கள். இயக்கங்களுக்குள் ஜனநாயக மறுப்பும் உட்பட்டு கொலைகளும் சகோதரப் படுகொலைகளும் தலைவிரித்தாடின. என்.எல்.எஃப்.டி., பி.எல்.எஃப்.டி., ''தீப்பொறி''

> **தமிழீழத்தை ஒருபோதும் ஏற்காத போலிக் கம்யூனிஸ்டு, காங்கிரசு, பா.ஜ.க., போன்றவற்றின் தா.பாண்டியன், இல.கணேசன், குமரி அனந்தன் போன்ற உள்ளூர்த் தலைவர்களையும் கூட ஈழ ஆதரவாளர்களாகக் கொண்டு உறவாடும் தமிழினவாதிகள், தமிழீழத்தை உறுதியாக ஆதரித்து வரும் புரட்சிகர அமைப்புகளுக்கு எதிராக அவதூறு செய்கிறார்கள்.**

போன்ற மாறுபட்ட பொது வுடைமை, ஜனநாயக அரசியலைக் கொண்ட சிறு குழுக்கள் மட்டும் இந்தப் போக்கிற்கு விதிவிலக்காக இருந்தன. அவையும் புலிகளால் தடைசெய்யப்பட்டும், ''ரா'' வின் தூண்டுதலால் அவற்றின் தலைவர் கள் படுகொலைகள் செய்யப்பட்டும் அழிக்கப்பட்டன.

விடுதலை இயக்கங்களுக்கு ஆதர வாகவும் தமிழீழக் கோரிக்கைக்கு ஆத ரவாகவும் திரண்டிருந்த மக்கள் மீதே இயக்கங்கள் அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கின. இந்த அராஜ கச் செயல்களை எதிர்த்த போராளிகள் இயக்கங்களிலிருந்து வெளியேறி ஜனநாயக வழிப்பட்ட புதிய தமிழீழப் போராட்டக் குழுக்களை அமைப்ப தற்காகப் போராடிக் கொண்டிருந் தார்கள். அதேவேளையில் நூற்றுக் கணக்கான போராளிகள் இந்த அராஜகத் தலைமைகளுக்கு எதிராக உள்ளிருந்து போராடி மடிந்தார்கள்.



கிழக்கு மாகாணம் - மட்டக்களப்பு, காத்தான்குடி மசூதியில்
ஆக.3,1990 அன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில்
கொல்லப்பட்ட முசுலீம்கள். (கோப்புப் படம்)

*1986*-இல் புலிகள் மற்றைய இயக்கங்களைத் தடை செய்து தலைவர்களைக் கொன்றொழித்ததுடன் தமிழீழக் கோரிக்கைக்குப் பாசிசப் பரிமாணத்தைக் கொண்டு வந்து சேர்த்தார்கள். உரிமை கோரப்படாத கொலைகளும் இரகசியக் கொலைகளும் ஆயிரக் கணக்கில் புலிகளால் நிகழ்த்தப்பட்டன. தமிழீழம் என்ற முழக்கமானது பாசிசப் புலித் தலைமைகளைப் பாதுகாக்கும் கவசமாகக் கொள்ளப்பட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் தொடர்ச்சி யாகவோ, புலிகளின் பாசிச அரசியலின் நீட்டிப் பாகவோ, எஞ்சியுள்ள புலிகளின் விருப்பங்களுக் காகவோ, தமிழ்நாட்டுத் தமிழ்தேசிய இனவாதிகளின் விருப்பங்களுக்காகவோ, அவர்களின் பாணியிலான தமிழீழப் போராட்டத்தை முன்னெடுப்பது ஈழத்தமிழர் களுக்கே துரோகம் செய்வதாகும். ஒரு தேசிய இனத் தின் விடுதலை என்பது எப்படியாவது தனியரசை அமைத்துவிடுவது, ஏதாவது ஒரு இயக்கத்தின் அதி காரத்தை நிலை நாட்டுவதல்ல; மாறாக, ஒடுக்கப்படும் தேசிய இன மக்களின் நலனையும் ஜனநாயகத்தையும் அது இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

எந்தவொரு தேசிய இனமும் வேறொரு இனத் தால், பேரினவாதத்தால், அந்நிய நாட்டால் அல்லது ஏகாதிபத்திய ஆதிக்கத்தால் ஒடுக்கப்படக்கூடாது. அதேசமயம், அதை முறியடிப்பது, விடுவிப்பது என்ற பெயரால் சொந்த தேசத்து அல்லது உள்நாட்டு பாசிச சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு கொடுங் கோலாட்சி செலுத்துவதையும் அனுமதிக்க முடியாது. பாசிசத்தின் ஆகமோசமான அரசியல் புகலிடம்தான் தேசியம்.

ஆஃப்கானின் தாலிபான்கள், ஈராக்கின் பாசிச சதாம் உசைன் அமெரிக்க ஆக்கரமிப்பையும், பஞ்சாபின் காலிஸ்தானிகள் இந்தியாவின் ஆதிக்கத்தையும் எதிர்த்துத் தமது ''தேசிய உரிமை''க்காகப் போராடி னாலும், தம் மக்கள் மீதே பாசிச பயங்கரவாதத் தாக்குதலை நடத்தினார்கள்; அவர் தம் ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்தார்கள். ஆகவே, எல்லாத் தேசியப் போர்களையும் நிபந்தனையின்றி ஆதரித்துவிட முடியாது. புலிகளின் தமிழீழமும் இவ்வாறான பாசிச உள்ளடக்கத்தையும் வழி முறையையும் கொண்டது.

தேசிய இன ஒடுக்குமுறைக்குத் தேசிய இனத் தன்னுரிமைதான் சரியான, அவசியமான தீர்வு என்றாலும், தனியரசு அமைவது உள்நாட்டு மற்றும் உலக அரசியல் சூழ்நிலைமைகளைச் சார்ந்துள்ளது. வெறும் இராணுவவாத நோக்கில் தனியரசுதான் ஒரே தீர்வு என்று கொள்ளவும் முடியாது. தமிழீழத்துக்கும் இது பொருந்தும்.

இத்தகைய புரிதலோடு தமிழீழத்தை ம.க.இ.க., புதிய ஜனநாயகம், பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு. முதலிய அமைப்புகள் எப்போதும் சமரச மின்றி, உறுதியாக ஆதரித்து வந்திருக்கின்றன. தமி ழீழத்தை ஒருபோதும் ஏற்காத போலிக் கம்யூனிஸ்டு, காங்கிரசு, பா.ஜ.க., போன்றவற்றின் தா.பாண்டியன், இல.கணேசன், குமரி அனந்தன் போன்ற உள்ளூர்த் தலைவர்களையும் கூட ஈழ ஆதரவாளர்களாகக் கொண்டு உறவாடும் தமிழினவாதிகளோ, இதை ஏற்க மறுத்து புரட்சிகர அமைப்பு களுக்கு எதிராக அவதூறு செய்கிறார்கள்.

– ஆசிரியர் குழு

# டாஸ்மாக் சாராயக் கடையை விரட்டிய மக்கள் போராட்டம்!

நெடுஞ்சாலைகளிலுள்ள சாராயக் கடைகளை ஊருக்குள் இடமாற்றம் செய்வதை எதிர்த்து தமிழகத்தின் பல பகுதிகளில் போராட்டங்கள் நடந்த வண்ணம் உள்ளன. வேதாரண்யம் – கீழ் ஆறுமுகக் கட்டளைக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள டாஸ்மாக் மதுபானக் கடையை அகற்றக் கோரி பலமுறை மனு கொடுத்துப் பார்த்து வெறுப்படைந்த மக்கள், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் அணிதிரண்டு துண்டுப்பிரசுரங்கள் – சுவரொட்டிகள் மூலம் சாராயச் சீரழிவுக்கு எதிராகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக ஜூன் 14 அன்று டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டு வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி சாலையில் மறியல் செய்தனர்.




விவசாயக் குடும்பத்துப் பெண்களும் இளைஞர்களும் மாணவர்களும் பெருமளவில் பங்கேற்ற இந்தப் போராட்டத்தை பேச்சுவார்த்தை நாடகத்தின் மூலம் கலைத்துவிடலாம் என்ற நோக்கத்தோடு வந்த வட்டாட்சியர், ‘‘ஒரு மாதத்தில் கடையை இடமாற்றம் செய்கிறோம், இல்லையேல் மூடிவிடுகிறோம்’’ என்று தாஜா செய்து பார்த்தார். இதை ஏற்க மறுத்து உடனடியாகக் கடையை மூடக்கோரி உறுதியுடன் போராட்டம் தொடர்ந்ததால், இன்னும் 20 நாட்களில் இடமாற்றம் செய்வதாக வாக்களித்தார். இந்த வாய்வழி உறுதியை ஏற்காமல் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாகப் போராட்டம் தொடர்ந்ததால், பின்னர் வேறுவழியின்றி அவரே தனது உறுதியை எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தார். எத்தனையோ முறை வட்டாட்சியரிடம் மனு கொடுத்த போதிலும், அதனை அலட்சியப்படுத்திய அவர், அமைப்பு ரீதியாகத் திரண்டு போராடும்போது நேரில் வந்து எழுதி கொடுத்துச் சென்றுள்ளதால் இப்போராட்ட வெற்றியானது, இப்பகுதியெங்கும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி-ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சூளகிரி – காமராஜ் நகரில் இருமுறை டாஸ்மாக் சாராயக் கடையைத் திறக்க முயற்சித்து அதனை உள்ளூர் மக்களின் ஆதரவுடன் வி.வி.மு. முறியடித்துள்ளது. இந்நிலையில், இப்போது மீண்டும் சாராயக் கடையை காமராஜ் நகரில் கொண்டு வர தமிழக அரசு முடிவு செய்துள்ளதை எதிர்த்து இப்பகுதிவாழ் மக்கள் திரண்டு போலீசிடம் முறையிட்டபோது, கடையைக் காட்டுக்குள்ளேவா திறக்கமுடியும் என்று மிரட்டியது. பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் ஏப்ரல் முதல் நாளன்று மனு கொடுத்ததைத் தொடர்ந்து விசாரிக்க வந்த வட்டாட்சியரோ, இந்த இடத்தில் தாராளமாகக் கடையைத் திறக்கலாம் என்றார். அருகில் பள்ளிக்கூடம் இருப்பதை தெரிவித்தபோது, இந்த இடத்தில் வேண்டாமென்றால் வேறு இடம் காட்டுங்க என்றார் மாவட்ட டாஸ்மாக் மேலாளர். இனி இவர்களிடம் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்ட மக்கள், இனி எந்த அதிகாரியாவது கடையைத் திறக்க வந்தால் அடித்து விரட்ட வேண்டுமென்ற முடிவோடு, இரவும் பகலுமாக முறைவைத்துக் கொண்டு குடும்பத்தோடு கடையின் முன் முற்றுகையிட்டு தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். மார்ச் 28-ஆம் தேதியிலிருந்து 65 நாட்களாக வி.வி.மு. வழிநடத்தியஉறுதியான இப்போராட்டத்தால் அரண்டு போன அதிகார வர்க்கம், கடையைத் திறக்கும் திட்டத்தைக் கைவிட்டதாக அறிவித்துள்ளது. இப்போராட்ட வெற்றியானது, இப்பகுதிவாழ் மக்களிடம் வி.வி.மு. மீது புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.



- பு.ஜ. செய்தியாளர்கள்.

### அரியானா அரசு - போலீசு - நீதிமன்றம்:

# மாருதி நிர்வாகத்தின் சட்டபூர்வ கூலிப்படைகள்!

**பொய்வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மாருதி தொழிலாளர்களுக்குப் பிணை உள்ளிட்ட உரிமைகளை மறுப்பதன் மூலம், அவர்கள் சட்டவிரோதமாகத் தண்டிக்கப்படுகின்றனர்.**

அரியானா மாநிலத்தின் மானேசரிலுள்ள மாருதி கார் ஆலைத் தொழிலாளர்கள், கடந்த ஆண்டு ஜூலையில் அந்நிறுவனத்தின் கார்ப்பரேட் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடிய 'குற்ற'த்துக்காக 147 தொழிலாளர்கள் உள்ளிட்டு ஒட்டுமொத்த தொழிற்சங்கத்தினரும் சிறையிடப்பட்டுள்ளனர். அவர்களில் 66 பேர் மீது பிணையில் வெளிவர முடியாதபடி கடுமையான குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்குகள் போடப்பட்டுள்ளன. கடந்த ஓராண்டு காலமாக அவர்களுக்குப் பிணை வழங்கப்படவில்லை.

கைதான தொழிலாளர்களுள் ஒருவர் விஜேந்திரா. அவர் வேலைசெய்தால்தான் வீட்டில் அடுப்பெரியும் நிலைமை. அவரின் தாயோ நிரந்தர நோயாளி. கர்ப்பிணியான அவரது மனைவிக்குக் கடந்த ஜனவரியில் குழந்தை பிறந்து உதவிக்கு யாருமில்லாத நிலையில், மருத்துவமனையிலுள்ள தனது மனைவியைப் பார்த்துவிட்டு வருவதற்கு அனுமதி கோரிய போதிலும் அவருக்குப் பிணை மறுக்கப்பட்டது.

ராம்விலாஸ் எனும் மாருதி தொழிலாளி கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவரது பாட்டி, படுத்த படுக்கையாகி பிப்ரவரியில் மாண்டுபோனார். மரணப் படுக்கையிலிருந்த அவரைச் சந்திக்கக்கூட அத்தொழிலாளிக்குப் பிணை தரப்படவில்லை. இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவும் அவருக்கு அனுமதி தரப்படவில்லை. பின்னர், தனக்குப் பிறந்த குழந்தையைப் பார்த்துவிட்டு வருவதற்குக்கூட அவருக்குப் பிணை வழங்கப்படவில்லை.

பிரேம்பால் என்ற தொழிலாளியின் துயரம் மிகக் கொடியது. குடும்பத்தில் அவர் மட்டுமே சம்பாதிப்பவர். பிரேம்பால் கைதான போது அவரின் 2 வயதுக் குழந்தை, தந்தையைக் காணாத ஏக்கத்தில் நோய்வாய்ப்பட்டு மரித்துவிட்டது. பிரேம்பால் கைதான அதிர்ச்சியும் குழந்தை இறந்த துயரமும் சேர்ந்ததால் பிரேம்பாலின் தாயும் இறந்துவிட்டார். இந்நிலையிலும் கூட பிரேம்பாலுக்கு ஒருவார காலத்துக்கான பரோல் நிராகரிக்கப்பட்டது. அவரின் மனைவியோ கணவன் கைதாகி, குழந்தையையும் மாமியாரையும் மரணம் தின்றுவிட, தனிமையில் நோயாளியாகி மருத்துவமனையில் சாகக் கிடக்கிறார். இதனால் பிரேம்பால் மனநிலை பாதிக்கப்பட்டவராகிவிட்டார். சிறைக்குள் வாடும் தொழிலாளர்கள் பலர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் பலர் காசநோயாலும் மூல நோயாலும் பாதிக்கப்பட்டுத் தகுந்த சிகிச்சையின்றி வாடுகின்றனர்.

சென்ற ஆண்டு ஜூலையில் மாருதி நிர்வாகத்தின் கொத்தடிமைத்தனத்துக்கும் கொடூரச் சுரண்டலுக்கும் எதிராக தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்துத் தொழிலாளர்கள் போராடியபோது, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஜியாலால் என்ற தொழிலாளியைச் சாதிப் பெயரைச் சொல்லித் திட்டிய கண்காணிப்பாளரைத் தட்டிக்கேட்ட தொழிலாளர்கள், நிர்வாகத்தின் குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதற்கெதிராக தொழிலாளர்களும் திருப்பித் தாக்க, இருதரப்பினருக்குமிடையிலான மோதலில் மேலாளர் அவினேஷ் தேவ் என்பவர் கொல்லப்பட்டார். இவரைத் தொழிலாளிகள்தான் கொன்றனர் என்கிறது மாருதி நிர்வாகமும் போலீசும். ஆனால், தொழிலாளர்களோ இந்த மேலாளர் தொழிற்சங்கம் கட்டுவதற்குத் துணை நின்றவர் என்கின்றனர். ஆலையில் நடந்த மோதலைப் பயன்படுத்திக் கொண்டு இவரைக் குறிவைத்துத் தாக்கி மாருதி நிர்வாகம் கொன்றொழித்துள்ளது என்று வாதிடும் தொழிலாளர்கள், இது குறித்து நடுநிலையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்கின்றனர்.

மேலாளர் அவினேஷ் தேவ் கொல்லப்பட்டதை முகாந்திரமாகக் கொண்டு அரியானா மாநில அரசும் மாருதி நிர்வாகமும் தொழி-

பொய்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தனது கணவர் ஜியாலாலின் புகைப்படத்தோடு அவரது மனைவி சோனியா.



லாளர்களைப் பழிவாங்கத் தொடங்கியது. விசாரணை ஏதுமின்றி 548 தொழிலாளர்கள் மாருதி நிர்வாகத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஒப்பந்தத் தொழிலாளர்களில் 2000 பேர் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். கொலைவழக்கில் 147 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



பொய்வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோரி, கைதாலிலுள்ள அரியானா மாநிலத் தொழில்துறை அமைச்சர் வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்யத் திரண்டிருந்த மாருதி தொழிலாளர்களைத் தடுக்கும் போலீசு.

தொழிற்சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் இக்கொலைவழக்கில் அரசு கைது செய்துள்ளது. எனவே தற்காலிகச் செயற்குழுவை நியமித்துக் கொண்டு, ஜூலை மாதத்தில் மாருதி ஆலையில் நடந்த போராட்டம் பற்றி நடுநிலையாக விசாரிக்கவும், நிர்வாகத்தின் தொடர் அடக்குமுறைகளை எதிர்த்தும், சிறையிடப்பட்டுள்ள தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாத மாருதி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் கடந்த நவம்பரிலிருந்து தொழிலாளர்கள் போராடி வருகின்றனர். பயங்கரவாத மாருதி நிர்வாகத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக கடந்த பிப்ரவரி மாதத்தில் நாடு தழுவிய அளவில் பல்வேறு தொழிற்சங்கங்களுடன் இணைந்து பழிவாங்கப்பட்ட மாருதி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

அரசு அசைந்து கொடுக்காத நிலையில், கடந்த மார்ச் இறுதியில் அரியானா மாநிலத் தொழிலமைச்சர் வீட்டை முற்றுகையிட்டுப் போராடத் தொடங்கினர். பெருமளவில் போலீசுபடையைக் குவித்துப் போராட்டக்குழுவினர் தங்குவதற்குப் பந்தல் போட்டிருந்த இடத்தின் சொந்தக்காரரை மிரட்டியும், தொழிலாளர்களுக்கு ஆதரவாக இருந்த டீக்கடைக்காரர்களை மிரட்டியும் இப்போராட்டத்தை அரசு ஒடுக்க முயற்சித்ததால், அதை எதிர்த்து மழையையும் கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். இதனைப் பல்வேறு பிரிவு உழைக்கும் மக்களும் மட்டுமின்றி, 150-க்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களும் ஆதரித்து நின்றதால், வேறுவழியின்றி பேச்சுவார்த்தைக்கு அரசு இறங்கி வந்தது. வழக்குகள் ஏதும் இல்லாத தொழிலாளர்களை மீண்டும் மாருதியில் சேர்த்துக் கொள்ள தொழிலாளர்நல ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும், இவ்வழக்கு நடைபெறும்வரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள் என்றும்அரசு உறுதியளித்த பின்னரே உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது.




பின்னர், கடந்த மே 8-ஆம் தேதியன்று 2000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் சுற்றுப்புற சிறுநகர மற்றும் கிராமப்புற மக்களும் திரண்டு கைத்தால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உழைக்கும் மக்களின் மகாபஞ்சாயத்து கூட்டத்தை நடத்தினர். இதில் ஹீரோ ஹோண்டா, ஐ.எம்.டி., ரிகோ, புளூஸ்டார் உள்ளிட்ட பல்வேறு ஆலைகளின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், மும்பை மற்றும் பஞ்சாபின் லூதியானா மாவட்டத் தொழிற்சங்கத்தினரும், மாணவர் - மகளிர் அமைப்புகளும் பங்கேற்று ஆதரித்தன.

பல மாதங்களாகச் சிறையில் வாடும் தொழிலாளர்களைப் பிணையில் விடுவிக்கக் கோரி அனைத்துத்தரப்பு தொழிற்சங்கத்தினரும், தொழிலாளர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் உள்ளாட்சி மன்ற தலைவர்களும் இணைந்து கடந்த மே 19 அன்று மாநில தொழிலாளர் துறை அமைச்சர் வீட்டின் எதிரே ஆர்ப்பாட்டத்தை நடத்தியபோது, முன்னறிவிப்பு ஏதுமின்றித் தடியடித் தாக்குதலை நடத்தியது போலீசு. இப்போராட்டத்தில் கலந்துகொண்ட மாருதி தொழிலாளர் சங்கத்தின் தற்காலிகச் செயற்குழு உறுப்பினரோடு, உள்ளூர் பஞ்சாயத்து தலைவர் சுரேஷ் கோத், கைத்தால் நகர்மன்ற உறுப்பினர் பிரேம்சந்த் முதலானோர் மீதும் கொலைமுயற்சி உள்ளிட்ட பிணையில் வரமுடியாத வழக்குகளைப் போட்டுக் கைது செய்தது. இக்கொடிய அடக்குமுறையை எதிர்த்து அரியானா மாநிலத்தின் பல்வேறு தொழிற்சங்கங்களும் அங்கன்வாடி ஊழியர் சங்கமும், மாருதி பவர்ட்ரைன், ஹோண்டா, ரிக்கோ,

சத்யம் ஆட்டோ உள்ளிட்ட பல்வேறு ஆலைகளின் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தலைமைச் செயலகம் எதிரே ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

அரியானாவின் கைதால் நகரில் 57 நாட்களாக தர்ணா போராட்டமும் 8 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டமும் நடத்திய பிறகு, கடந்த மே 18, 19 தேதிகளில் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தாரும் ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டம் நடத்திய போது போலீசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு 111 பேர் கைது செய்யப்பட்டனர். எந்த வழியிலும் போராடவே கூடாது என்று தொழிலாளர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுகின்றனர்.




மாருதி தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகப் பல்வேறு தொழிற்சங்கங்களும் இணைந்து உருவாக்கியிருக்கும் மாருதி தொழிலாளர் போராட்ட ஆதரவு கமிட்டியின் சார்பில், பொய்வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மாருதி தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோரி மும்பய் நகரில் கடந்த ஜூன் மாதம் நடந்த ஆர்ப்பாட்டம்.

வர்க்க ஒற்றுமையுடன் தொடரும் மாருதி தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்க கைத்தால் நகரில் 144 தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது, அரியானா அரசு. போராடுவோரைப் பழிவாங்கும் நோக்கத்தோடு பிணைத்தொகையை ஒவ்வொருவருக்கும் ரூ. 40 ஆயிரம் என அரசு உயர்த்தியுள்ளது. மாருதி தொழிலாளர்களுக்குப் பிணை மறுப்பது, பொய் வழக்குகளைத் தொடர்வது போன்ற வழிமுறைகள் மூலம் அவர்களைப் பணியவைத்துவிடலாம் என்பதே அரசின் நோக்கமாக உள்ளது. இருப்பினும் இவற்றைத் துச்சமாக மதித்து, அரியானா உழைக்கும் மக்கள் தரும் ஆதரவோடு மாருதி தொழிலாளர்கள் விடாப்பிடியாக தொடர்ந்து போராடி வருகின்றனர். நீதிக்கான இந்தப் போராட்டத்தில் 84 சர்பஞ்ச்கள் (ஊராட்சி மன்றத் தலைவர்கள்) தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். கைதால் நகரின் தேநீர்க் கடைக்காரர்கள் உள்ளிட்டு அரியானாவின் பல்வேறு பிரிவு உழைக்கும் மக்களது தொழிற்சங்கங்களின் ஆதரவையும் மாருதி தொழிலாளர்கள் திரட்டியுள்ளனர்.

சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் கார்ப்பரேட் பயங்கரவாதத்துக்கும் எதிரான மாருதி தொழிலாளர் போராட்டம், வரும் ஜூலை 18-ஆம் தேதியுடன் ஓராண்டை எட்டுகிறது. 147 முன்னணித் தொழிலாளர்கள் குர்கான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குக் கீழமை நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் பிணை வழங்க மறுக்கின்றன. தொழிலாளருக்கு ஆதரவான அவினேஷ் தேவ் என்ற மேலாளர் கொல்லப்பட்டதைப் பற்றி விசாரணை நடத்த அரசு மறுக்கிறது. தொழிலாளர்களைக் கிரிமினல்களாகவும் தீவிரவாதிகளாகவும் மாருதி நிர்வாகம் மட்டுமின்றி, ஊடகங்களும் தொடர்ந்து அவதூறு செய்து வருகின்றன. மாருதியில் பணியாற்றிவந்த 2300 தொழிலாளிகள் எவ்விதக் காரணமுமின்றி வேலைநீக்கம் செய்யப்பட்டு, குடும்பத்தோடு வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தொடர் முழக்கப் போராட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தக்கூடாது, துண்டுப் பிரசுரங்களைக்கூட விநியோகிக்கக் கூடாது என்று மானேசர் தொழிற்பேட்டை பகுதியில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஜூன் 23 அன்று மாருதி தொழிற்சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தின் முடிவுப்படி, வரும் ஜூலை 18 அன்று மாருதி தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு மானேசர் நோக்கிச் செல்லும் நடைபயணப் போராட்டத்தையும், அந்நாளில் காலவரையற்ற மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தவுள்ளனர். இதற்கான பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

மாருதி சுசுகியைப் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள், தொழிலாளர்கள் சங்கமாகத் திரளும் அடிப்படை உரிமையைக்கூட மதிப்பதில்லை. இதற்கெதிராகப் போராடினால் போராட்டங்களைக் கொடூரமாக நசுக்குவதன் மூலம், அன்னிய மூலதனத்தின் கட்டற்ற கொள்ளையையும் அடக்குமுறையையும் நியாயப்படுத்திப் பாதுகாக்கிறது அரசு. தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி முதலாளித்துவ ஊடகங்கள் இதற்குத் துணை நிற்கின்றன.

தனியார்மய-தாராளமயத்தால் நாடு முழுவதும் உழைக்கும் மக்கள் கொடூரச் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டுள்ள நிலையில், தீவிரமாகி வரும் இம்முதலாளித்துவப் பயங்கரவாதத்தை முறியடிக்க தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையும் அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களின் ஆதரவும்தான் இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலில் அவசர அவசியத் தேவையாகியுள்ளது. இதனைத் தமது சொந்த அனுபவத்தினூடாக உணர்ந்து, உணர்வோடும் ஒற்றுமையோடும் போராடிவரும் மாருதி தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியது உழைக்கும் வர்க்கத்தின் கடமை. நம் கடமை.

● அன்பு

# இரத்தப் பலி கேட்கும் அந்நிய முதலீட்டாளர்கள்!

2007-08 இல் 40.24 ஆக இருந்த டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து 60 ரூபாய்க்கு வந்துவிட்டது. மூலதனத்துக்கும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கும் பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்களையே சார்ந்திருப்பதுதான் ரூபாயின் மதிப்பு தள்ளாடுவதற்கு அடிப்படையான காரணம் என்று முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்களே ஒப்புக்கொள்கின்றனர். தாங்கள் போட்ட முதலீட்டுக்குக் கொள்ளை இலாபத்தை உறிஞ்சி வந்த பன்னாட்டு நிதி நிறுவனங்கள், அமெரிக்க அரசு தனது நாட்டில் முதலீட்டுக்கான வட்டி வீதத்தைத் தற்சமயம் சற்று உயர்த்தியவுடனேயே, வெட்டுக்கிளிக் கூட்டம் போல இந்தியாவிலிருந்து வெளியேறி, ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைவதைத் தொடங்கி வைத்ததோடு, துரிதப் படுத்தியும் வருகின்றன.

இன்னொருபுறம், நடப்புக்கணக்குப் பற்றாக்குறை. ''மார்ச் 2014-க்குள் 172 பில்லியன் டாலர் அந்நியக் கடனை இந்தியா திருப்பிக் கொடுக்க வேண்டும். இது அந்நிய செலாவணி கையிருப்பின் 60 விழுக்காட்டை விழுங்கி விடும்'' என்கிறது 29.6.2013 இந்து நாளேட்டின் தலைப்பு செய்தி. கடந்த ஆறே ஆண்டுகளில் அந்நியக் கடன் 3 மடங்கு அதிகரித்திருக்கிறதாம். அது மட்டுமல்ல, இந்த 172 பில்லியனில் 44 சதவீதத் தொகையானது, டாடா - அம்பானி போன்ற இந்தியத் தரகு முதலாளிகள் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் வாங்கியிருக்கும் கடன். இந்தக் கடனுக்கும் இந்திய அரசு தான் ( அதாவது இந்திய மக்கள்தான்) பொறுப்பு. இதுபோக, தற்போதுள்ள நடப்புக் கணக்குப் பற்றாக் குறையைச் சமாளிக்க வேண்டுமானால், 90 பில்லியன் டாலர் அந்நிய மூலதனத்தை இந்தியா கவர்ந்திழுக்க வேண்டும் என்று கூறுகிறது பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் கவுன்சில்.

ஆனால், கடந்த ஒரு மாதத்திற்குள் 5 பில்லியன் டாலர் அந்நிய மூலதனம் வெளியேறியிருப்பதாக கூறுகிறது மும்பை பங்குச் சந்தை. ''நெருக்கடியான'' இந்தச் சூழ்நிலைமையில் அந்நிய மூலதனத்தைக் கவர்ந்திழுக்க வேண்டுமானால், அவர்களுடைய இரத்தப் பசிக்கு தீனி போடும் வகையில் தனியார்மய-தாராளமயக் கொள்கையைத் தீவிரப்படுத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்று மன்மோகன் சிங் கும்பல் வாதாடும்.

வேறுவழியின்றியோ, நெருக்கடியின் காரணமாகவோ அந்நிய மூலதனத்துக்கு அடிபணிவதாக இவர்கள் கூறுவது பித்தலாட்டம் என்பதையும், ஒப்பீட்டளவில் நெருக்கடி இல்லாத காலங்களிலும் அந்நிய மூலதனத்துக்கு நாட்டை விலை பேசுவதுதான் இவர்களது கொள்கையாக இருந்தது என்பதையும் ஆதாரங்களுடன் விளக்குகிறது இக்கட்டுரை.

- ஆசிரியர் குழு.

இந்தியப் பொருளாதாரம் அந்நிய முதலீடுகளின் வரவைப் பெரிதும் சார்ந்திருப்பதனால் பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்களின் (Foreign Institutional Investors) உத்தரவுகளுக்கு அடிபணிவதைத் தவிரத் தனக்கு வேறு வழியில்லை என்று நிதியமைச்சர் கூறுகிறார். 2007-08 - இல் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சதவீதமாக இருந்த நடப்புக் கணக்குப் பற்றாக்குறை, 2011-12 - இல் முன்னெப்போதும் இல்லாத வகையில் 4.2 சதவீதம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. 2012-13 - இல் இது 5 விழுக்காட்டைத் தாண்டி விடும் என்பது உறுதி. அந்த நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் இது 6.7 சதவீதமாக இருந்தது. நடப்புக் கணக்குப் பற்றாக்குறையின் அபாயகரமான நிலையைப் பார்க்கும் போது, முதன்முறையாக நிதியமைச்சர் எதார்த்த நிலையை வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருப்பதைப் போன்ற தோற்றத்தைத் தருகிறது.

ஆனால் ஆள்வோர், அந்நிய மூலதனத்தின் காலில் விழுந்து கும்பிடுவதற்கு நடப்புக் கணக்குப் பற்றாக் குறையின் அபாயகரமான நிலைமைதான் காரணம் என்பது உண்மையல்ல. 2001-04 - இல் நடப்புக்கணக்கு உபரியில் இருந்தபோதும் இவர்கள் அந்நிய மூலதனத்தின் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடந்தனர் என்பதே இதற்கு சான்று.(1)

2007-08 - இலும் இது தெளிவாக வெளிப்பட்டது. அந்த ஆண்டில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை நிகர உள்நாட்டு உற்பத்தியில் 1.3 விழுக்காடாக இருந்தது. அந்நிய மூலதன வரவோ, இதனைவிடப் பன்மடங்கு அதிகமாக, நிகர உள்நாட்டு உற்பத்தியில் 8.6 விழுக்காடாக இருந்தது. இதன் காரணமாக இந்த முதலீட்டு வரவு, அந்நியச் செலாவணிக் கையிருப்பில் சேர்க்கப் பட்டது. இந்த நடவடிக்கை பல்வேறு விதங்களில் பொருளாதாரத்தின் மீது சுமையைக் கூட்டியதுடன் அதனைச் சிதைக்கவும் செய்தது. எனவே, அந்நிய மூலதனத்தின் முன் மண்டியிடுவது என்பது குறிப்பிட்ட சூழ்நிலைக்கான எதிர்வினை அல்ல. இதற்கான வரலாற்று வேர்கள் இன்றைய இந்திய ஆளும் வர்க்கங்கள் உருவாகி வந்த நிகழ்ச்சிப்போக்கிலேயே இருக்கின்றன.

எனவே, நிதியமைச்சருடைய நடவடிக்கைக்கான உண்மையான தூண்டுதல் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை திடீரென படுமோசம் அடைந்திருப்பதல்ல. மாறாக, சில்லறை வணிகத்தை அந்நிய நேரடி முதலீட்டுக்குத் திறந்து விடுவது உள்ளிட்ட, கடும் எதிர்ப்பைச் சந்திக்கின்ற எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அமல்படுத்துவதற்கான ஒரு முகாந்திரம். இந்நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களிடம் சிதம்பரம் தனது பட்ஜெட் உரையில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

‘‘என்னுடைய மிகப்பெரும் கவலை நடப்புக் கணக்குப் பற்றாக்குறை. அது தொடர்ந்து அதிகமாகவே இருந்து வருகிறது. இந்த ஆண்டு, ஏன் அடுத்த ஆண்டும்கூட நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சமாளிக்க நாம் 75 பில்லியன் டாலர்களைக் கொண்டு வந்தாகவேண்டும். நமக்கு முன்னே மூன்று வழிகள்தான் இருக்கின்றன. அந்நிய நேரடி முதலீடு, அந்நிய நிதி நிறுவன முதலீடு அல்லது வெளிநாட்டு வர்த்தகக் கடன்.’’

அந்நிய மூலதனத்தைத் திருப்திப்படுத்த முதலாவதாகவும் முதன்மையானதாகவும் பட்ஜெட் கையாளும் வழிமுறை அரசு செலவினத்தை குறைப்பதாகும். 2013-14 ஆம் ஆண்டிற்கு நிதிப்பற்றாக்குறை இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள 4.8% என்பதை மாற்றவியலாது என்பதாலும், பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ள வருவாய் இனங்களிலிருந்து நிதி வருவாய் ஈட்டுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதாலும், இந்த ஆண்டின் மத்தியிலேயே அரசு செலவினங்கள் மேலும் வெட்டப்படும் என்பது, அநேகமாக முன்கூட்டியே தெரிந்துவிட்ட முடிவாக இருக்கிறது. நிதிப்பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு செலவினங்களை கண்மூடித்தனமாக வெட்டக்கூடியவர் சிதம்பரம். இதை அவர் 2012-13 இலேயே நமக்கு நிரூபித்திருக்கிறார்.

இரண்டாவதாக, ஷோமே கமிட்டியின் சிபாரிசுகளுக்குத் தனது ஒப்புதலை வழங்குவதன் மூலம் அந்நிய மூலதனத்தை மகிழ்விக்கும் வகையில் பட்ஜெட் அமையவேண்டும். சென்ற பட்ஜெட்டில் அன்றைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ‘‘வரி தவிர்ப்புநடவடிக்கைகளுக்கு எதிரான பொதுவிதிகளை’’ (General Anti Avoidance Rules)-அறிவித்திருந்தார். வரியைத் தவிர்ப்பதைத் தவிர வேறு எந்த வணிக உள்ளடக்கமோ நோக்கமோ இல்லாத பரிமாற்றங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு (எடுத்துக்காட்டாக மொரிசியஸ் வழியாக இந்தியாவில் முதலீடு செய்தல்) வரிச்சலுகைகளை ரத்து செய்யும் அதிகாரத்தை வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு வழங்குகின்ற அந்த அறிவிப்பு, அந்நிய நிதி முதலீட்டாளர்களின் ஆத்திரம் கொண்ட எதிர்வினையைத் தூண்டிவிட்டது.

முகர்ஜியின் இடத்துக்கு சிதம்பரம் வந்தவுடன், வரித் தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான பொது விதிகளை ஒழித்துக் கட்டுவதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் பொருட்டு ஷோமே கமிட்டியினை நியமித்தார். என்னவிதமான சிபாரிசுகள் அந்தக் கமிட்டியிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டனவோ அவற்றை அந்தக் கமிட்டி கச்சிதமாக வழங்கியது. அதன் பெரும்பான்மையான சிபாரிசுகளை ஏற்பதாக ஜனவரி 14-ஆம் தேதியன்று சிதம்பரம் அறிவித்தார். வரி தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான பொதுவிதிகளை ஏறத்தாழ குழி தோண்டிப் புதைக்கின்ற இந்த முடிவு பட்ஜெட் உரையில் இடம்பெறுகிறது. வேறு எந்தவித வணிக நோக்கமும் இல்லாமல், வரித் தவிர்ப்பை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஒரு ஏற்பாட்டை செய்து கொண்டு வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வோடாஃபோன் நிறுவனத்துடன் ஒரு சுமுகத் தீர்வை எட்டுவதற்கு நிதியமைச்சகம் இப்போது முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

மேலும், அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் முதலீடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது, அவற்றுக்கு வசதிகள் செய்து கொடுப்பது, நாணயச் சூதாட்டத்தில் ஈடுபட அவர்களை அனுமதிப்பது, குறிப்பிட்ட துறைகளில் அந்நிய முதலீடுகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் உச்சவரம்புகளை நீக்குவது போன்ற பல நடவடிக்கைகளுக்கு பட்ஜெட் உரை கணிசமான முக்கியத்துவம் அளிக்கிறது.




இருப்பினும் இத்தனை சலுகைகளையும் பொருட்படுத்தாது, பட்ஜெட் நாளன்று தங்களது கோபம் முழுவதையும் நிதி மசோதாவின் ஒரேயொரு அம்சத்தை நோக்கித் திருப்பின அந்நிய முதலீட்டு நிறுவனங்கள். அந்த அம்சம் இந்தியாவுடன் வரி சார்ந்த ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் நாடுகளின் வழியாக வருகின்ற முதலீடுகள் பற்றியது.

இந்தியாவுக்கும் மொரிசியஸுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. இதன்படி மொரிசியஸில் தங்குமிட

உரிமை பெற்ற நிறுவனங்கள், தாங்கள் செலுத்த வேண்டிய மூலதன ஆதாய வரியை மொரிசியஸில்தான் செலுத்தும். இந்தியாவில் அல்ல. மொரிசியஸிலோ மூலதன ஆதாய வரியே கிடையாது. எனவே அந்நிய முதலீட்டாளர்கள் மொரிசியஸில் பெயர்ப்பலகை நிறுவனங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் தமது முதலீடுகளை இந்தியாவுக்குள் கொண்டு வருகிறார்கள். ஆம், இந்தியாவில் போடப்பட்டிருக்கின்ற அந்நிய நேரடி முதலீடு மற்றும் அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் முதலீடு ஆகியவற்றில் மொரிசியஸ்தான் முதலிடம் வகிக்கிறது. சிங்கப்பூருக்கு இரண்டாவது இடம். சிங்கப்பூருடனும் இந்தியா வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.




தற்போது கொண்டுவரப்பட்ட நிதி மசோதாவின் ஒரு பிரிவுதான் அந்நிய நிதி முதலீட்டு நிறுவனங்கள் கோபம் கொள்ளக் காரணம் என்று தெரிகிறது. ஒரு நிறுவனம் மொரிசியஸில் தங்குமிட உரிமை பெற்றது என்ற சான்றிதழை மட்டும் காட்டி மொரிசியஸ் -இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வரிச் சலுகையை இந்திய அரசிடமிருந்து பெறவியலாது என்றும், இறுதியில் இந்த வரிச்சலுகையின் ஆதாயத்தைப் பெறுகின்றவர் யார் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறுகிறது இந்தப் பிரிவு. மேலும், இந்தச் சலுகையைப் பெறுகின்றவர் மொரிசியஸைச் சேர்ந்தவராக இல்லாத பட்சத்தில், அந்த நிறுவனங்களிடமிருந்து இந்திய வருவாய்த்துறை அதிகாரிகள், மூலதன ஆதாய வரியை வசூலிக்க முடியும் என்றும் இந்தப் பிரிவு கூறுவதாகத் தெரிகிறது. இந்திய வரிச்சட்டங்கள் எனப்படுபவை வெறும் கேலிக்கூத்தாக ஆகிவிடாமல் தடுக்க வேண்டுமானால், இப்படி ஒரு நிபந்தனை அவசியம் என்பதை யாரும் விளங்கிக் கொள்ள இயலும்.

ஆனால், அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் பட்ஜெட் தினத்தன்றே, பங்குகளை விற்கத் தொடங்கியதன் மூலம் மோதலைத் துவக்கினர். வரி தொடர்பான தங்குமிடச் சான்றிதழுக்கு மேல் இந்திய வருமான வரித்துறை அதிகாரிகள் போக மாட்டார்கள் என்றும், அந்நிய முதலீட்டாளர்களின் தங்குமிடத் தகுதியைக் கேள்விக்குள்ளாக்க மாட்டார்கள் என்றும் நிதியமைச்சர் மறுநாளே அறிக்கை வெளியிட்டார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அந்நிய முதலீட்டாளர்கள் இந்திய வரிச் சட்டங்களைத் தொடர்ந்து கேலிக்கூத்தாக்கலாம் என்று உத்திரவாதம் அளித்தார். (2)

இத்தகைய பெருமுயற்சிகளுக்குப் பின்னரும் தன்னுடைய பட்ஜெட்டை வைத்து அந்நிய முதலீட்டாளர்களை நிதியமைச்சரால் திருப்திப்படுத்த இயலவில்லை என்றே தெரிகிறது. தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் உண்மையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை அவர்கள் இடையறாத கண்காணிப்பில் வைத்திருக்கிறார்கள். புதிய சலுகைகளையும் நடவடிக்கைகளையும் கோரித் தொடர்ந்து நிர்ப்பந்தங்களையும் கொடுத்து வருகிறார்கள்.

**அடிக்குறிப்புகள்:**

(1) இந்தக் காலகட்டத்தில் அரசுக் கருவூலத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் பணத்தைப் பிடுங்கி, அந்நிய நிதி முதலீட்டாளர்களுக்கு வழங்கிய பளிச்சென்று தெரியும் இரண்டு முடிவுகளைப் பார்ப்போம்.

‘‘மொரிசியஸில் உள்ள பெயர்ப்பலகை நிறுவனங்கள் மூலம் தங்களுடைய முதலீடுகளை இந்தியாவுக்குள் அனுப்புவதன் மூலம், மொரிசியஸுடனான இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஒரு அந்நிய முதலீட்டாளர் தன்னுடைய ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்வாரேயானால், அதனைக் கண்டுபிடிப்பது அரசின் வரி வசூல் நிர்வாகத்துடைய கடமை’’ என்று 2002 - இல் டெல்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அக்டோபர் 2002 - இல் மைய அரசு இந்த தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உயர் நீதிமன்றத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததன் விளைவாக, ‘‘மொரிசியஸ் பாதை’’ யின் மூலம் நடக்கும் பிரம்மாண்டமான வரி ஏய்ப்பு இன்று வரை தொடர்கிறது. இரண்டாவதாக, ஒரு முதலீட்டாளர் ஒரு நிறுவனத்தின் பங்கை வாங்கிய நாளில் இருந்து ஒரு ஆண்டுக்குப் பின்னர் விற்பனை செய்வாரேயானால் அதற்கு மூலதன ஆதாய வரியிலிருந்து விலக்கு அளித்தது 2003-04 பட்ஜெட்.

(2) இந்த மொத்த நிகழ்வுமே 2000 ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்களின் மறுபதிப்புத்தான். அன்று அரசாங்கம் ஒரு சுற்றறிக்கையை (எண். 789) அனுப்பி, வரி உறைவிடச் சான்றிதழ் கொடுத்துவிட்டால் போதும்; அதனை ஆராயாமல் நாங்கள் கண்ணை மூடிக் கொள்கிறோம் என்று அரசு விளக்கமளித்தது.

(Aspects of India's Economy, Issue No.53 - இல் வெளிவந்த “FIIs:Difficult to please" என்ற கட்டுரையின் *தமிழாக்கம்.)*

## குஜராத் முசுலீம் படுகொலை:

# சிறப்புப் புலனாய்வுக் குழுவின் மோசடிகள் – சதிகள்!

**மோடியைக் காப்பாற்றுவது என்ற உள்நோக்கத்தோடு சிறப்புப் புலனாய்வுக் குழு இயங்கி வந்திருப்பதை அம்பலப்படுத்துகிறார், ஜாகியா ஜாஃப்ரி.**

குஜராத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பு நடந்த முசுலீம் படுகொலையின்பொழுது மிகக்கொடூரமாகக் கொல்லப்பட்ட இஷான்ஜாஃப்ரியின் மனைவி ஜாகியா ஜாஃப்ரி, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மற்றும் அவரது சக அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட 62 பேர் மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்களை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழு, ''நரேந்திர மோடி உள்ளிட்டோர் மீது சுமத்தப்பட்ட 32 குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரமோ, விசாரிக்கத் தக்க சாட்சியமோ இல்லாததால், அவர்கள் மீது எந்தவொரு வழக்கும் பதிவு செய்ய முடியாது'' எனக் கடந்த ஆண்டு அகமதாபாத் விசாரணை நீதிமன்றத்திடம் அறிக்கை அளித்தது. இந்த அறிக்கைக்கு எதிரான மனுவொன்றை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஜாகியா ஜாஃப்ரி, ''சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும்; ஒரு சுதந்திரமான கமிசனை அமைத்து மோடி மீதான தனது குற்றச்சாட்டுகள் குறித்து மீண்டும் விசாரணை நடத்த வேண்டும்'' எனக் கோரியிருக்கிறார்.

ஜாகியா ஜாஃப்ரி இந்த மனுவைத் தாக்கல் செய்தது கூட எளிதாக நடந்துவிடவில்லை. சிறப்புப் புலனாய்வுக் குழு, தனது அறிக்கைகள்-சாட்சியங்கள் குறித்த ஆவணங்கள் உள்ளிட்டு அனைத்தையும் ஜாகியா ஜாஃப்ரிக்கு வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்திரவிட்டிருந்த போதும், அக்குழு இந்த உத்தரவை மதித்து நடக்கவில்லை. ஜாகியா ஜாஃப்ரி தனது அறிக்கைக்கு எதிராக எதிர் மனு தாக்கல் செய்வதைத் தடுக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன், அந்த ஆவணங்களை முழுமையாக அவருக்கு வழங்க மறுத்து வந்தது, சிறப்புப் புலனாய்வுக் குழு. ஜாகியா ஜாஃப்ரி இச்சட்டவிரோத அடாவடித்தனத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வென்று, அதன் பிறகு தான் இந்த எதிர் மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். சிறப்புப் புலனாய்வுக் குழு மோடியைக் காப்பாற்றுவதற்கு எத்துணை கீழ்த்தரமான வேலையிலும் இறங்கும் என்பதற்கு இது இன்னொரு சான்று.

நரேந்திர மோடி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை முழுமையாக விடுவித்துவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடுதான் சிறப்புப் புலனாய்வுக் குழு தனது விசாரணையை நடத்தி வந்தது எனஜாகியாஜாஃப்ரி மட்டுமல்ல, குஜராத்தின் முன்னாள் போலீசுதலைமை இயக்குநர் ஆர்.பி. சிறீகுமார், மோடி அரசால் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள அம்மாநில முன்னாள் உளவுத் துறை துணை ஆணையர் சஞ்சீவ் பட், குஜராத் முசுலீம் படுகொலை பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்திய தெகல்கா வார இதழ் நிருபர் ஆஷிஷ் கேதான் உள்ளிட்டுப் பலரும் அம்பலப் படுத்தியுள்ளனர். சிறப்புப் புலனாய்வுக் குழு இவ்விசாரணையின் இடைக்கால அறிக்கையை உச்ச நீதிமன்றத்திடம் அளித்தபொழுது, ''விசாரணைக்கும் அதன் இறுதியில் வந்தடைந்த முடிவுகளுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை'' என அந்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்ததோடு, இவ்வழக்கு விசாரணையைக் கண்காணிக்க ராஜு ராமச்சந்திரன் என்ற வழக்குரைஞரை நீதிமன்ற நண்பனாக (அமிகஸ் கியுரே) நியமித்தது.

மோடி மீது எந்தவொரு வழக்கும் பதிவு செய்ய முகாந்திரமில்லை எனச்

இந்து மதவெறி பயங்கரவாதி நரேந்திர மோடியைத் தண்டிக்கக் கோரிப் போராடிவரும் ஜாகியா ஜாஃப்ரி (நடுவில்) மற்றும் வழக்குரைஞர் தீஸ்தா சேதல்வாத் (இடது).



சிறப்புப் புலனாய்வுக் குழு அறிக்கை அளித்திருப்பதற்கு மாறாக, ''மதக் காழ்ப் புணர்ச்சியைத் தூண்டிவிட்ட குற்றத்திற் காக மோடி மீது வழக்குத் தொடர முகாந் திரம் இருப்பதாக'' அறிக்கை அளித்திருக் கிறார், ராஜு ராமச்சந்திரன். மேலும், மோடி பிப்.27, 2002 அன்று இரவு நடத்திய உயர் அதிகாரிகள் கூட்டத்தில், ''இந்துக்கள் தங்கள் கோபத்தை வெளிப் படுத்துவதைத் தடுக்கக் கூடாது'' எனக் கூறியது தொடர்பாக போலீசு அதிகாரி சஞ்சீவ் பட் அளித்திருக்கும் சாட்சி யத்தைச் சிறப்புப் புலனாய்வுக் குழு நம்ப கத்தன்மையற்றது எனக் கூறி ஒதுக்கி விட்டது. ஆனால், ''சஞ்சீவ் பட் சாட்சியத் தின் உண்மைத்தன்மையை நீதிமன்ற விசாரணையின் மூலம்தான் முடிவு செய்ய வேண்டும்'' எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார், ராஜு ராமச்சந்திரன்.



குஜராத் முசுலீம் படுகொலையின் சதிகாரர்கள்: நரேந்திர மோடி மற்றும் விசுவ இந்து பரிஷத்தின் குஜராத் மாநிலச் செயலர் ஜெய்தீப் படேல்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை நிரா கரிக்க வேண்டும் என ஜாகியா ஜாஃப்ரி கோரியிருப்பதை இந்தப் பின்னணியிலிருந்துதான் புரிந்துகொள்ள வேண்டும். அவர், தனது எதிர் மனுவில் இணைத்துள்ள ஆதாரங்கள், குஜராத் முசுலீம் படுகொலைக்கான சதித் திட்டமும் ஆலோசனையும் கோத்ராவில் ரயில் பெட்டி கள் தீக்கிரையான செய்தி மோடிக்குத் தெரிந்த மறு நிமிடமே தொடங்கிவிட்டதை எடுத்துக் காட்டுகிறது; சிறப்புப் புலனாய்வுக் குழு மோடியின் கைத்தடியாகச் செயல்பட்டு வந்திருப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

• • •

2000-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் குஜராத்தில் நடந்த இடைத்தேர்தல்களில் பா.ஜ.க., தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருந்த வேளையில்தான் ஆர்.எஸ்.எஸ்.-இன் வளர்ப்புப் பிராணியான நரேந்திர மோடி குஜராத் முதல்வர் பதவியில் அமர்த்தப்பட்டார். இத்தோல்விகளிலிருந்து மீள்வதற்கு முசுலீம்களுக்கு எதிரான இந்து மதவெறியைத் தூண்டிவிடும் கிரிமினல் நடவடிக்கைகளில் ஆர்.எஸ்.எஸ். பரிவார் அமைப்புகள் அனைத்தும் அச்சமயத்தில் ஈடுபட்டு வந்தன. இந்த நேரத்தில்தான் சபர்மதி விரைவுவண்டியின் இரு பெட்டிகள் கோத்ரா ரயில் நிலையத்தில் தீக்கிரையாகின.

இந்தச் செய்தி அகமதாபாத்தை எட்டியவுடன், நரேந்திர மோடி உள்துறை அதிகாரிகளுக்கு அப்பால், அம்மாநில விசுவ இந்து பரிசத்தின் பொதுச் செயலர் ஜெய்தீப் படேலோடும் (தொலைபேசி வழியாக) உரை யாடியிருக்கிறார். இந்த உரையாடல் ஒரு பெரும் சதித் திட்டத்தின் தொடக்கம் என்பதை பின்னால் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

கோத்ரா சம்பவம் குறித்து முறையான விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே, ''இது பாகிஸ்தான் உதவியோடு முசுலீம்கள் நடத்திய திட்டமிட்ட சதிச் செயல்'' எனச் சட்டசபையில் நாக்கூசாமல் அறிவித்த கையோடு கோத்ராவுக்குக் கிளம்பிச் சென்ற மோடி, தீக் கிரையாகி இறந்துபோன கரசேவகர்கள் மற்றும் பிறரின் உடல்களைச் சட்டத்திற்குப் புறம்பாக வெட்ட வெளியில், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களின் கண்முன்பாக, பிரேதப் பரிசோதனை நடத்திட உத்தரவிட்டார். ஒரு புறம் பிரேதப் பரிசோதனை நடந்துகொண்டிருக்க, இன்னொருபுறம் அமைச்சரவைக் கூட்டம் என்ற பெயரில் சதியாலோசனைக் கூட்டமும் நடந்தது. மோடியோடு பேசி வைத்திருந்தபடி கோத்ராவுக்கு வந்திருந்த ஜெய் தீப் படேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதே, இது கலவரத்தைத் தூண்டிவிடுவதற்காக நடத்தப்பட்ட கூட்டம்தான் என்பதை நிரூபிக்கிறது. இக்கூட்டத்தில் இறந்துபோனவர்களின் உடலை ஜெய்தீப் படேலிடம் ஒப்படைக்கவும், அவர் அச்சடலங்களை கோத்ராவி லிருந்து 300 கி.மீட்டருக்கு அப்பாலுள்ள அகமதா பாத்திற்குச் சாலை வழியாக எடுத்துச் செல்லவும் அனுமதிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

அரசைச் சாராத வெளிநபரும் இந்து மதவெறி பயங்கரவாதியுமான ஜெய்தீப் படேலிடம் சடலங்களை ஒப்படைக்கும் முடிவை கோத்ரா மாவட்ட ஆட்சியராக இருந்த ஜெயந்தி ரவி எதிர்த்தபோதும், மோடி இச்சட்ட விரோத முடிவை நடைமுறைப்படுத்தினார். சடலங் களைச் சாலை வழியாக ஊர்வலமாக எடுத்துவருவதன் மூலம் இந்து மதவெறியைக் கொழுந்துவிட்டு எரியச் செய்ய முடியும் என்பதுதான் மோடியின் கணக்கு. அன்றிரவே அகமதாபாத் திரும்பிய நரேந்திர மோடி உயர் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி, ''இந்துக்கள் தங்கள் கோபத்தை வெளிக்காட்டுவதைத் தடுக்கக் கூடாது'' என்றும் கட்டளையிட்டார். கூட்டக் குறிப்புகள் பதிவு செய்யப்படாமல், தந்திரமாகவும் சதித்தனமாகவும் நடத்தி முடிக்கப்பட்ட இக்கூட்டத்தின் மூலம் இந்து மத வெறி பயங்கரவாதிகளுக்கு அரசு பாதுகாப்பு அளிக்கும் என்பது வெளிப்படையாக, அதேசமயம் சட்ட விரோதமான முறையில் உறுதி செய்யப்பட்டது.

இதற்கு மறுநாள் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மாநிலம் தழுவிய அடைப்புப் போராட்டத்தை, மோடி அரசின் முழு ஆசியோடு அறிவித்து நடத்தின. அன்று ஜெய்தீப் படேல் நரோடா காவ் தாக்குதலைத் தலைமையேற்று நடத்தினான்; மோடி அரசில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சராக இருந்த மாயாபென் கோத்நானி நரோடா பாட்டியா தாக்குதலைத் தலைமையேற்று நடத்தினார்.

ஏறத்தாழ ஒரு மாத காலத்திற்கு மேலாக நடந்த குஜராத் முசுலீம் படுகொலையின் தொடக்கம் இப்படித்தான் அமைந்தது. ஆனால், சிறப்புப் புலனாய்வுக் குழுவோ கோத்ரா ரயில் பெட்டி தீக்கிரையான பிப்.27 மற்றும் நரோடா காவ், நரோடா பாட்டியா படுகொலைகள் நடந்த பிப்.28 ஆகிய இரு தினங்களிலும் மோடிக்கும் ஜெய்தீப் படேலுக்கு இடையே நடந்த தொலைபேசி உரையாடல்கள் குறித்து விசாரிப்பதை வேண்டுமென்றே தவிர்த்துவிட்டது. ''இறந்து போனவர்களின் சடலங்களை ஜெய்தீப் படேலிடம் ஒப்படைக்கும் முடிவை, மோடி எடுக்கவில்லை; மாஜிஸ்ட்ரேட் ஒருவர்தான் எடுத்தார்'' எனச் சட்ட பாயிண்டுகளைக் காட்டி, மதவெறியையும், கலவரத்தையும் தூண்டிவிட்ட குற்றச்சாட்டிலிருந்து மோடியை நயவஞ்சகமாகத் தப்பவைத்தது. பிப்.27 அன்று இரவில் மோடி அதிகாரிகள் கூட்டத்தை நடத்தியதற்கான ஆதாரம் எதுவுமில்லை எனக் கூறி மோடியைச் சதிக் குற்றச்சாட்டிலிருந்தும் தப்ப வைத்துவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, கோத்ராவில் தீக்கிரையாகி இறந்து போனவர்களின் சடலங்கள் அகமதாபாத்திற்கு எடுத்து வரப்பட்டு எரியூட்டப்பட்ட அன்று, அதே நாளில் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் மாநிலம் தழுவிய பந்த் நடத்தியபொழுது, குஜராத் மாநிலம் முழுவதும் எவ்வித வன்முறையுமின்றி அமைதியாக இருந்ததென்று அறிக்கை அளித்திருக்கிறது. இதன் மூலம் அப்படுகொலைகள் திட்டமிட்ட முறையில் தூண்டிவிடப்பட்டோ, அரசின் ஒத்துழைப்போடோ நடத்தப்படவில்லை; மாறாக, அவை இந்துக்களின் தன்னெழுச்சியான ஆத்திரத்தின் வெளிப்பாடுதான் எனக் காட்ட முனைந்திருக்கிறது. ஆனால், அந்த இரு நாட்களிலும் எதார்த்த நிலைமை குறித்து உளவுத்துறை போலீசார் அனுப்பிய செய்திகளே சிறப்புப் புலனாய்வுக் குழுவின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்துகின்றன.

- சடலங்கள் அகமதாபாத்திற்குக் கொண்டுவரப்படும் செய்தியைக் கேள்விப்படும் ஒரு உளவு அதிகாரி, தனது மேலதிகாரிக்கு பிப்.27 அன்று மதியம் அனுப்பிய தந்திச் செய்தியில், ''அகமதாபாத்தில் மதக் கலவரம் நடக்கும்; எனவே, பாதுகாப்பு முன்னேற்பாடுகளை எடுக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

- ஜெய்தீப் படேல், கௌசிக் மேத்தா, திலீப் திரிவேதி உள்ளிட்ட வி.இ.ப. தலைவர்கள், ''கோத்ராவில் இந்துப் பெண்கள் மானபங்கபடுத்தப்பட்டதாக'' வதந்தியைப் பரப்பி மதவெறியைத் தூண்டிவருவதாகவும்; வாபி, பாவ்நகர், கேத்பிரம்மா உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் முசுலீம் எதிர்ப்பு பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி வருவதாகவும்; ''இரத்தத்துக்குப் பதில் இரத்தம்'' என ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் கொலைவெறியோடு தொலைக்காட்சிகளுக்கு பேட்டி கொடுத்துவருவதாகவும் உளவுத்துறை அனுப்பிய தந்திச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

- அகமதாபாத்தில் சடலங்கள் வைக்கப்பட்டிருந்த சோலா சிவில் மருத்துவமனையிலிருந்து பிப்.28 அதிகாலை முதல் அனுப்பப்பட்ட ஒவ்வொரு தந்திச் செய்தியும், அம்மருத்துவமனை 3,000-க்கும் அதிகமான இந்து மதவெறிக் கும்பலால் சுற்றி வளைக்கப்பட்டு நிலைமை கட்டுக்கு அடங்காமல் போவதைக் குறிப்பிடுவதோடு, மருத்துவமனைக்கு சிறப்பு போலீசு படையை அனுப்புமாறும் கோருகிறது. அம்மருத்துவமனையிலிருந்து இறுதியாக அனுப்பப்பட்ட தந்திச் செய்தி, அப்பகுதியில் கலவரம் வெடித்துவிட்டதாகக் குறிப்பிடுகிறது.

- சபர்கந்தா மாவட்டத்திலிருந்து அனுப்பப்பட்ட தந்திச் செய்தி, கேத்பிரம்மா ஊரில் நடந்த சவ அடக்க ஊர்வலத்தில் வன்முறை ஏற்பட்டு, இரண்டு முசுலீம்கள் கத்தியால் குத்தப்பட்டதைக் குறிப்பிடுகிறது.




அகமதாபாத் நகர போலீசு கட்டுப்பாடு அறையிலிருந்தும், மாநில முழுவதுமுள்ள பல்வேறு போலீசு நிலையங்களிலிருந்தும் அந்த இரண்டு நாட்களில் இவை போன்று நூற்றுக்கணக்கான தந்திச் செய்திகள் போலீசு தலைமை அலுவலகத்திற்கும், உள்துறை அமைச்சரான மோடிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. மோடி அரசோ முசுலீம்களுக்கு எதிரான படுகொலையைத் தொடர்ந்து நடத்தும் திட்டப்படி செயல்பட்டு வந்ததால், இந்தத் தந்திகளில் பெரும்பாலானவற்றை அழித்து, ஆதாரமில்லாமல் செய்தது.

சிறப்புப் புலனாய்வுக் குழுவோ தனது கைக்குக் கிடைத்த மிச்சம்மீதி தந்திச் செய்திகளிலிருந்து உண்மையைக் கண்டறிய மறுத்து, மோடியைக் காப்பாற்றியது.

குஜராத் முசுலீம் படுகொலைக்கும் மோடிக்கும் தொடர்புண்டு என்பதை நிரூபிப்பதற்கு சாட்சியங்களையும் ஆதாரங்களையும் கேட்பது கைப்புண்ணைப் பார்க்க கண்ணாடி கொண்டுவரச் சொல்வதைப் போன்றது. எனினும், போதுமான ஆதாரங்களைத் திரட்டிக் கொடுத்த பிறகும் மோடியின் மீது ஒரு பெட்டி கேஸைப் போடுவதற்குக்கூட இந்திய நீதிமன்றங்கள் தயாராக இல்லை. தீவிரவாதிகளாக முத்திரை குத்தப்படும் அப்பாவி முசுலீம்களை எவ்வித ஆதாரமும் இன்றித் தூக்கு மேடைக்கு அனுப்பத் தயங்காத இந்திய நீதிமன்றங்கள், மோடிக்கு அளித்துவரும் இந்தச் சலுகை அநீதியானது. ஊழலோ, அதிகாரமுறைகேடுகளோ அம்பலமாகும்பொழுது அதில் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலக வேண்டும் என சவுண்டு விடும் மேல்தட்டு பார்ப்பனக் கும்பலும் அவர்களின் ஊதுகுழல்களான தேசியப் பத்திரிகைகளும் இத்துணை கொடூரமான, பெருந்திரள் படுகொலையைத் திட்டமிட்டு நடத்திய மோடியைப் பிரதமர் நாற்காலியில் அமர்த்தி அழகு பார்க்கத் துடிக்கின்றன.

இத்தகைய அநீதியும் போலித்தனமும் ஓரவஞ்சனையும் நிறைந்த இந்த அரசியல் அமைப்பிற்குள், முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறி அரசியல் மைய நீரோட்டமாக மாறியுள்ள நிலையில் மோடியைத் தண்டித்துவிட முடியும் என நம்பிக்கை கொள்ள முடியுமா? ஆனாலும், இவற்றை எதிர்கொண்டுதான் ஜாகியா ஜாஃப்ரி போராடி வருகிறார். இத்தகைய போராட்டம் இல்லையென்றால், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல் குஜராத் படுகொலைக்கு என்றோ மங்களம் பாடியிருக்கும்.

● செல்வம்

# தாழ்த்தப்பட்ட சிறுவன் தலையில் செருப்பைச் சுமக்க வைத்த தேவர் சாதிவெறி!

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலுள்ள வடுகபட்டியில், கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்துத் தேர்வெழுதிய தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த 11 வயதான அருண்குமார் என்ற பள்ளிச் சிறுவன், தான் தேர்ச்சியடைத்துவிட்டோமா என்று பார்ப்பதற்காக காலில் செருப்பு அணிந்து கடந்த 3.6.2013 அன்று பள்ளிக்குச் சென்றுபோது, அதே ஊரைச் சேர்ந்த வீராயி கோயில் பூசாரியான பதிவராஜா என்பவரது மகனாகிய நிலமாலை என்ற தேவர் சாதி வெறியன், சிறுவன் அருண்குமாரை மிரட்டிச் செருப்பைக் கழற்றவைத்து, பின்னர் அதனைத் தலையில் சுமந்து நடக்க வைத்து, இத்தீண்டாமைக் கொடூரத்தை வக்கிரமாக ரசித்துள்ளான்.

இளம் சிறுவனிடம் இப்படி நடப்பது நியாயமா என்று நிலமாலையின் தம்பியிடம் அருண்குமாரின் தாயார் நாகம்மாள் முறையிட்ட பின்னர், 5.6.2013 அன்று குடிபோதையிலிருந்த நிலமாலை, நாகம்மாளின் வீட்டிற்கு வந்து சாதியைச் சொல்லி இழிவுபடுத்தியதோடு, ஆபாச வார்த்தைகளால் ஏசி கூச்சல் போட்டுள்ளான். அதன் பிறகு நாகம்மாள் போலீசு நிலையத்தில் இது பற்றி முறையிட்டுள்ளார். ஆனால் போலீசு ஆய்வாளர் தேவர் சாதிக்காரர் என்பதால் இந்த விவகாரத்தை மூடி மறைக்க முயற்சித்துள்ளார். இச்சாதி வெறிக் கொடூரம் ஊடகங்களில் வெளிவந்த பின்னர்தான், தேவர் சாதி வெறியன் நிலமாலை கைது செய்யப்பட்டுள்ளான். சிறுவன் அருண்குமார் தீண்டாமைக் கொடுமைக்குத் தான் ஆளாக்கப்பட்ட அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்போது வேறொரு பள்ளியில் சேர்ந்துள்ளான்.



உசிலம்பட்டி வட்டத்தில் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் செருப்பு அணிந்து நடக்கவோ, ஊருக்குள் சைக்கிள், அல்லது மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்வதோ, வேட்டியை மடித்துக் கட்டி நடப்பதோ முடியாது. இங்கு கேள்விமுறையற்ற சாதி ஆதிக்கமும், தீண்டாமையும் நிலவுவதோடு, பிணம் எரிப்பது உள்ளிட்ட பல சேவைத் தொழில்களை மிரட்டிக் கட்டாயப்படுத்தி தாழ்த்தப்பட்டோரைச் செய்ய வைப்பதும் தொடர்கிறது. இதை எதிர்த்து வாய்திறக்க முடியாமல் தாழ்த்தப்பட்டோர் அடக்கப்பட்டிருப்பதைத்தான், 'தாயா-பிள்ளையா ஒற்றுமையுடன் வாழ்கிறோம்' என்றும், ஊர் 'அமைதி'யாக இருப்பதாகவும் ஆதிக்க சாதி வெறியர்கள் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். இதை அருண்குமாரின் தாயார் நாகம்மாள் கெடுத்துவிட்டாரே, இதுநாள் வரை செருப்பு அணியக் கூடாது என்று அதட்டி வைத்திருந்த விவகாரம் இப்போது ஊடகங்களில் நாறுகிறதே என்பதுதான் தேவர் சாதிவெறியர்களின் இப்போதைய கவலை. இன்னமும்கூட இச்சாதிவெறியர்கள் இத்தீண்டாமையைக் குற்றமாகக் கருதவில்லை.

இத்தீண்டாமைக் கொடூரத்தை எதிர்த்து மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளை சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட சிறுவனை நேரில் சந்தித்து நம்பிக்கையூட்டி துணைநின்றதோடு, சாதிவெறியையும் தீண்டாமையையும் எதிர்த்து போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தி விவசாயிகள் விடுதலை முன்னணியின் தோழர்கள் இக்கிராம மக்களிடம் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

– பு.ஜ.செய்தியாளர், உசிலம்பட்டி

## இஷ்ரத் ஜஹான் போலிமோதல் கொலை:

# மோடி - காங்கிரசின் கள்ளக்கூட்டு!

**இஷ்ரத் ஜஹான் போலிமோதல் கொலை பற்றிய உண்மைகள் அம்பலமாவதை மோடி மட்டுமல்ல, காங்கிரசும் விரும்பவில்லை.**

மோடி அரசால் திட்டமிட்டு நடத்தப்பட்ட குஜராத் முசுலீம் படுகொலை குறித்த வழக்கு-விசாரணைகள் ஒரு புறமிருக்க, முன்னாள் நீதிபதி ஹெச்.எஸ். பேடி என்பவர் தலைமையில் உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள சிறப்புப் புலனாய்வுக் குழுவொன்று அம்மாநிலத்தில் 2003-க்கும் 2006-க்கும் இடைபட்ட காலத்தில் நடந்த 16 'மோதல்' கொலைகள் பற்றி விசாரணை நடத்தி வருகிறது. 2004-ஆம் ஆண்டு நடந்த இஷ்ரத் ஜஹான் என்ற கல்லூரி மாணவி உள்ளிட்ட நான்கு முசுலீம்கள் படுகொலை, 2005-ஆம் ஆண்டு நடந்த சோராபுதீன் படுகொலை, 2006-ஆம் ஆண்டு நடந்த துளசிராம் பிரஜாபதி படுகொலை ஆகியவை போலிமோதல் கொலைகள் என்பது நிரூபணமாகி, இவை தொடர்பான வழக்குகளை உச்ச நீதிமன்றமும் குஜராத் உயர் நீதிமன்றமும் கண்காணித்து வருகின்றன. குஜராத் முசுலீம் படுகொலையின்பொழுது மோடி அரசில் வருவாய்த் துறை இணை அமைச்சராக இருந்த ஹரேன் பாண்டியாவின் கொலைக்கும், சோராபுதீன், துளசிராம் பிரஜாபதி போலிமோதல் கொலைகளுக்கும் இடையே உள்ள தொடர்போ மர்மங்கள் நிறைந்த துப்பறியும் நாவலைப் போல விரிகிறது.

சோராபுதீன் போலிமோதல் கொலைவழக்கு தொடர்பாக குஜராத் அரசின் தீவிரவாத தடுப்புப் பிரிவைச் சேர்ந்த போலீசு அதிகாரிகள் மட்டுமின்றி, மோடிக்கு மிகவும் நெருக்கமானவரும் அவரது அரசில் உள்துறை இணை அமைச்சராக இருந்தவருமான அமித் ஷாவும் கைது செய்யப்பட்டு, தற்பொழுது அவர் பிணையில் விடப்பட்டுள்ளார். மும்பையைச் சேர்ந்த கல்லூரி மாணவி இஷ்ரத் ஜஹான் போலிமோதல் படுகொலையில் 21 உயர் போலீசு அதிகாரிகளுக்குத் தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறது, சி.பி.ஐ. இப்படுகொலையில் தொடர்புடைய போலீசு அதிகாரிகளைக் காப்பாற்றுவது தொடர்பாக விவாதிப்பதற்கு மோடி அரசின் உள்துறை இணை அமைச்சராக இருந்த பிரபுல் படேல் தலைமையில் நவம்பர் 2011-இல் இரகசியக் கூட்டமொன்று நடந்துள்ளது. இப்படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் கிரிஷ் லஷ்மண் சிங்கால் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவற்றை இரகசியமாக ஒலிப்பதிவு செய்து வைத்திருந்ததை, தற்பொழுது சி.பி.ஐ.-யிடம் சாட்சியமாக அளித்திருக்கிறார்.

ஏதோ ஒரு சில போலீசு அதிகாரிகள் மட்டுமல்ல, மோடி அரசு முழுவதுமே கிரிமினல் கும்பலைப் போலச் செயல்பட்டு வருவதை இப்போலிமோதல் கொலை வழக்குகள் எடுத்துக் காட்டுகின்றன. நரோடா பாட்டியா படுகொலைக்குத் தலைமை தாங்கிய மாயாபென் கோத்நானிக்கு, மோடி தனது அரசில் அமைச்சர் பதவி கொடுத்து வைத்திருந்ததும்; சோராபுதீன் கொலைவழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்டு பதவி விலகியுள்ள அமித் ஷாவை மோடி உ.பி.யின் பொறுப்பாளராக நியமித்திருப்பதும் அரசு மற்றும் அரசியல் அமைப்புகளை மோடி எந்தளவிற்கு கிரிமினல்மயமாக்கி வருகிறார் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. இக்கிரிமினல்மயம்தான் மோடியின் நிர்வாகத் திறமை போலும்!

ஒட்டுப் பொறுக்குவதில் எலியும் பூனையும் போல நிற்கும் மோடியும் காங்கிரசும் முசுலீம் தீவிரவாத எதிர்ப்பு அரசியலில் நெருங்கிய தோழர்களாகச் செயல்பட்டுவருவதை இஷ்ரத் ஜஹான் மற்றும் சோராபுதீன் போலிமோதல் கொலைவழக்குகளில் காணமுடியும். சோராபுதீனை ஆந்திராவிலிருந்து குஜராத்திற்குக் கடத்தி வருவதில் குஜராத் போலீசுக்கு, காங்கிரசு ஆட்சியிலுள்ள ஆந்திரா போலீசார் உதவியுள்ளனர். இஷ்ரத் ஜஹான்

போலிமோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட இஷ்ரத் ஜஹான் உள்ளிட்ட நால்வரின் சடலங்கள். (உள்படம்) இஷ்ரத் ஜஹான். (கோப்புப் படம்)



போலிமோதல் கொலை வழக்கிலோ, மத்திய காங்கிரசு அரசு மோடியின் பங்காளியாகச் செயல்பட்டிருப்பது நிருபணமாகி வருகிறது.

''இஷ்ரத் ஜஹான் உள்ளிட்ட நால்வரும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் மோடியைக் கொல்லும் நோக்கத்தோடு குஜராத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்ற ''பிட்டை'' - போலீசு மொழியில் உளவுத் தகவலை - மோடி அரசிடம் போட்டதே மைய அரசின் உளவுத்துறைதான் என்பது ஏற்கெனவே மைய அரசாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. வெறும் உளவுத் தகவலை அளித்ததோடு மட்டும் உளவுத் துறையின் பங்கு முடிந்துவிடவில்லை என்பது இப்பொழுது அம்பலமாகி இருக்கிறது. அச்சமயத்தில் உளவுத் துறையின் குஜராத் மாநிலத் தலைமை அதிகாரியாக இருந்த ராஜேந்தர் குமார் (தற்பொழுது இவர் உளவுத்துறையின் சிறப்பு இயக்குநர்) இந்த உளவுத் தகவலை அளித்ததோடு, அந்த நால்வரையும் சட்டவிரோதமாகக் கொலை செய்வதில் குஜராத் போலீசு அதிகாரிகளுக்கு உடந்தையாக இருந்ததாகவும் சி.பி.ஐ. குற்றஞ்சுமத்துகிறது.



குஜராத் போலீசு நடத்திய இஷ்ரத் ஜஹான் போலிமோதல் கொலைக்கு உடந்தையாக இருந்த மத்திய உளவுத் துறையின் சிறப்பு இயக்குநர் ராஜேந்தர் குமார்.

''அவர்கள் நால்வரும் குஜராத் போலீசின் சட்டவிரோதக் காவலில் இருந்தபொழுது ராஜேந்தர் குமார் நேரடியாக வந்து அவர்களைச் சந்தித்தார்; ஏ.கே. 56 இரகத் துப்பாக்கி ஒன்றை குஜராத் போலீசிடம் கொடுத்து, அத்துப்பாக்கியை அத்தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறும்படித் திட்டம் போட்டுக் கொடுத்ததே ராஜேந்தர் குமார்தான்'' என இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட போலீசு அதிகாரிகள் சி.பி.ஐ.-யிடம் சாட்சியம் அளித்திருப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. இது மட்டுமின்றி, ராஜேந்தர் குமார் அவர்கள் நால்வரையும் தீவிரவாதிகளாகச் சித்தரித்து அளித்த உளவுத் தகவலையே கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது, சி.பி.ஐ. இந்த வழக்கு விசாரணை புலி வாலைப் பிடித்த கதையைப் போலாகிவிட்டதால், காங்கிரசு அரசு வேறுவழியின்றித் தனது உளவுத் துறையின் மானம் மரியாதையைக் காப்பாற்ற குறுக்கு வழியில் இறங்கியிருக்கிறது.

சி.பி.ஐ., ராஜேந்தர் குமாரை இரண்டாம் முறையாக விசாரணைக்கு அழைத்தவுடனேயே, மத்திய உள்துறைச் செயலர் ஆர்.கே.சிங், சி.பி.ஐ., மற்றும் உளவுத்துறை இயக்குநர்களை அழைத்து ஒரு பஞ்சாயத்தை நடத்தி வைத்தார். இதன் காரணமாக ராஜேந்தர் குமாருக்கு எதிராக வலுவான குற்றச்சாட்டுகள் இருந்தும் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. இவரை விசாரிப்பதற்கே ஆயிரத்தெட்டு நிபந்தனைகள் விதித்த மைய அரசு, இவரது பெயர் குற்றப்பத்திரிகையில் இடம் பெறுவதை அனுமதிக்குமா என்பது கோடி ரூபாய் பெறுமானமுள்ள கேள்வியாக எழுந்து நிற்கிறது. மேலும், இவ்வழக்கில் தற்பொழுது தேடப்படும் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள குஜராத் குற்றப்பிரிவு போலீசு அதிகாரி பி.பி.பாண்டேவிற்கு காங்கிரசு கட்சியைச் சேர்ந்த மைய அமைச்சர்கள்தான் அடைக்கலம் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுவொருபுறமிருக்க, இஷ்ரத் ஜஹானோடு சேர்த்து சுட்டுக் கொல்லப்பட்டவர்களுள் ஒருவரான ஜாவேத் ஷேக் என்ற பிரானேஷ் பிள்ளைக்கும் லஷ்கர் அமைப்பின் கமாண்டர் ஒருவருக்கும் இடையே நடந்ததாகச் சொல்லப்படும் தொலைபேசி உரையாடல்களை ஹெட்லைன்ஸ் டுடே என்ற தனியார் தொலைக்காட்சியின் வழியாக இப்பொழுது கசியவிட்டு, அதன் மூலம் ''அந்நால்வரும் லஷ்கர் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள்தான்; மோடியைக் கொல்ல வந்தவர்கள்தான்'' என்ற தனது பொய்யை முட்டுக் கொடுத்து நிறுத்த முயன்றது, உளவுத்துறை. ''இந்த ஒலிநாடாவை இத்தனை நாட்களாக நீதிமன்றத்தில் கொடுக்காமல் இருந்தது ஏன்?'' என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அம்பலப்பட்டும் போனது.

போலிமோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட இந்நால்வரையும் உளவுத்துறை கீழ்த்தரமான முறையில் குற்றஞ்சாட்டுவதும் அதற்கு முதலாளித்துவப் பத்திரிகைகள் கூஜாவாகச் செயல்படுவதும் புதியதல்ல. மும்பய்த் தாக்குதல் வழக்கில் தொடர்புடையவர் எனக் கூறப்படும் டேவிட் ஹெட்லி, ''இஷ்ரத் ஜஹான் லஷ்கர் அமைப்பைச் சேர்ந்தவர்தான்'' என அமெரிக்க போலீசிடம் வாக்குமூலம் அளித்திருப்பதாக ஒரு செய்தியை சில ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிக்கைகளில் கசியவிட்டது, உளவுத் துறை. இதனைப் பின்னர் மைய அரசின் தேசியப் புலனாய்வு ஏஜென்சி மறுத்து, டேவிட் ஹெட்லி அப்படியெல்லாம் வாக்குமூலம் அளிக்கவில்லை என விளக்கம் அளித்தது. ஆனாலும், மோடியின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல, பிரபலமான முதலாளித்துவப் பத்திரிகைகள்கூட உளவுத் துறை கசியவிட்ட இப்பொய்ச்செய்தியை இன்றும்கூட திரும்பத்திரும்ப வெளியிட்டு, இப்படுகொலையை நியாயப்படுத்த முயன்று வருகிறார்கள்.

குஜராத் முசுலீம் படுகொலையில் மோடிக்கு உள்ள தொடர்பை அம்பலப்படுத்தியதற்காகக் கொல்லப்பட்ட குஜராத் மாநில முன்னாள் வருவாய்த் துறை இணை அமைச்சர் ஹரேன் பாண்டியா.



இதைவிடக் கேவலமாக இப்பிரச்சினையில் நடந்துகொண்டார், மைய அரசின் முன்னாள் உள் துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை. சிறப்புப் புலனாய்வுக் குழு, இது போலிமோதல் கொலை தான் என்பதை உறுதிசெய்து குஜராத் உயர் நீதி மன்றத்திடம் அறிக்கை அளித்த சமயத்தில், ''இஷ்ரத் ஜஹான் வெவ்வேறு விடுதிகளில் பல ஆண்களோடு சேர்ந்து தங்கியிருந்ததாக''க் கூறி, அவ்விளம் பெண்ணின் நடத்தையை அசிங்கப் படுத்த முயன்றார், அவர். இந்த அவதூறை தேசியப் பத்திரிகைகள் ஏதோ அரிய கண்டு பிடிப்பைப் போல வெளியிட்டு, உளவுத் துறைக்கு முட்டுக் கொடுத்தன.

இஷ்ரத் ஜஹான் மட்டுமல்ல, மோடியின் ஆட்சியில் போலிமோதலில் கொல்லப்பட்ட அனைவருமே தீவிரவாதிகளாகவும், இக் கொலைகள் அனைத்துமே நாட்டைப் பாது காக்கும் முசுலீம் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை களாகவும் சித்தரிக்கப்படுகின்றன. ''பாகிஸ் தானால் பயிற்சி அளிக்கப்படும் தீவிரவாதிகளால் மோடிக்கு அச்சுறுத்தல் இருந்து வருவதாகவும், எனினும் மோடி தனது உயிரையும் பொருட்படுத் தாமல் தீவிரவாதத்திற்கு எதிராக உறுதியான நட வடிக்கை எடுத்து வருவதாகவும்'' பில்ட்-அப் கொடுக்கப்பட்டு, இப்போலிமோதல் கொலைகள் பச்சையாக நியாயப்படுத்தப்படு கின்றன.



மாயாபென் கோத்நானி; அமித் ஷா

**நரோடா பாட்டியா படுகொலைக்குத் தலைமை தாங்கிய மாயாபென் கோத்நானிக்கு, மோடி தனது அரசில் அமைச்சர் பதவி கொடுத்து வைத்திருந் ததும்; சோராபுதீன் கொலைவழக்கில் குற்றஞ்சுமத் தப்பட்டு பதவி விலகியுள்ள அமித் ஷாவை மோடி உ.பி.யின் பொறுப்பாளராக நியமித்திருப்பதும் அரசு மற்றும் அரசியல் அமைப்புகளை மோடி எந்தள விற்கு கிரிமினல்மயமாக்கி வருகிறார் என்பதைத் துலக்கமாக எடுத்துக்காட்டுகின்றன.**

ஆனால், உண்மையோ இதற்கு நேர் எதி ராகவே இருக்கிறது. ஹரேன் பாண்டியாவை முசுலீம் தீவிரவாதிகள்தான் கொலை செய்ததாகக் கூறியது மோடி அரசு. ஆனால், இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 12 முசுலீம்களும் குஜராத் உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். சாதிக் ஜமால் என்ற முசுலீம் இளைஞரை ஜனவரி 2003-இல் 'மோதலில்' சுட்டுக் கொன்ற குஜராத் போலீசு, ''சாதிக், மோடியைக் கொல்லும் நோக்கத்தோடு குஜராத்திற்கு வந்த லஷ்கர் தீவிரவாதி'' எனக் கூறியது. ஆனால், இது பற்றி சி.பி.ஐ. நடத்திய விசாரணையில், சாதிக் குஜராத்தின் பாவ்நகர் மாவட்டத்தைச் சேர்ந்த சாதாரண முசுலீம் வாலிபர் என்பது அம்பலமாகியிருக்கிறது.

சோராபுதீன் உள்ளூர் தாதா என்பதும், அவனுக்கும் அமித் ஷாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததும் ஊரறிந்த உண்மை. குஜராத் முசுலீம் படுகொலையில் மோடிக்கு உள்ள தொடர்பு குறித்து ஹரேன் பாண்டியா சாட்சியம் அளித்த பிறகுதான் கொலை செய்யப்பட்டார். இக்கொலையில் சோராபுதீன் கும்பலுக்குத் தொடர்பு இருப்பது அம்பலமாகியதையடுத்து, சோராபுதீனும் அவனது அடியாளான துளசிராம் பிரஜாபதியும் போலி மோதலில் கொல்லப்பட்டனர். மேலும், சோராபுதீன் கொலை ராஜஸ்தானின் மார்பிள் சுரங்க முதலாளிகள் மற்றும் குஜராத் ரியல்எஸ்டேட் அதிபர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு நடத்தப்பட்ட சுஃபாரி கொலை என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. மோடியும் அவரது அரசும் தமது கிரிமினல் குற்றங்கள் அனைத்தையும் மறைப்பதற்கு முசுலீம் தீவிரவாத பூச் சாண்டி அரசியலைப் பயன்படுத்தி வருவதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

இப்படிபட்ட நிலையில் இஷ்ரத் ஜஹான் போலி மோதல் கொலையை விசாரித்து வரும் குஜராத் உயர் நீதிமன்றம், ''அவர்கள் தீவிரவாதிகளா, இல்லையா என்பது குறித்து எங்களுக்கு அக்கறையில்லை; அவர்கள் மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டது உண்மையானதா, போலியானதா என்பதில் மட்டும் கவனம் செலுத்தி, குற்றப் பத்திரிகையை ஜூலை 4-ஆம் தேதிக்குள் தாக்கல் செய்யுமாறு'' சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் மீது தீவிரவாத முத்திரை குத்தப்பட்டதை விசாரிக்கத் தொடங்கினால், அது மோடியின் கிரிமினல் தனத்தை மட்டுமல்ல, காங்கிரசு அரசு, அதன் உளவுத் துறையின் யோக்கியதையை மட்டுமல்ல, முசுலீம் தீவிர வாத எதிர்ப்பு அரசியலின் கிரிமினல்தனத்தையே பொது மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திவிடும். அப்படிபட்ட விசாரணை கண்ணாடி வீட்டிற்குள் இருந்துகொண்டு கல்லெறிவதைப் போலாகிவிடும் என்பதாலேயே, அடக்கி வாசிக்குமாறு சி.பி.ஐ.-க்குக் கட்டளையிடு கிறார்கள் நீதிபதிகள்.

● குப்பன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

பவத்தில் 45,000-க்கும் மேலான ரயில் பெட்டிகளை உருவாக்கியுள்ள ஐ.சி.எப்., இதுவரை தனது ஆண்டு இலக்கைத் தவற விட்டதில்லை. 2012-13 ஆம் ஆண்டிலும் தன்னுடைய இலக்கையும் தாண்டி 1620 ரயில் பெட்டிகளைத் தயாரித்து அடுத்த சாதனைக்குத் தயாராக உள்ளது. இதே போல 1886-இல் உருவான பஞ்சாப் மாநிலத்திலுள்ள கபூர்தலா ஆர்.சி.எப். ஆலையானது, இது வரை 16,000 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.

இவை தவிர, கடந்த 2012-இல் உ.பி. மாநிலத்தின் ரேபரேலியில் புதிய ரயில் பெட்டி தயாரிக்கும் ஆலைக்கு சோனியா காந்தியால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2,500 பெட்டிகள் தயாரிக்கும் அளவுக்கு இந்த ஆலையின் திறனை உயர்த்தப் போவதாக ரயில்வே துறை அறிவித்துள்ளது. மேலும், கேரளத்தின் கஞ்சிக்கோடில் ரயில் பெட்டி ஆலை அமைக்கும் திட்டமும், ஐ.சி.எப்.பை விரிவாக்கி இரண்டாவது பிரிவை உருவாக்க ரூ. 250 கோடிக்கான திட்டமும் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு விரிவான உள்கட்டமைப்பு வசதிகளும் அனுபவமிக்க தொழிலாளிகளும் உள்ள நிலையில் ரயில் பெட்டி உற்பத்தியைத் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் கடுகளவுகூட இல்லை.




தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலையைக் கொடுத்து வாங்குவதற்கு முக்கிய காரணம் செலவுகளைக் குறைப்பதுதான் என்று கூறப்படுகிறது. ஆனால் ரயில்வே துறை நடைமுறைப்படுத்தும் இந்த ஒப்பந்தப்படி, ஐ.சி.எப். பில் ஆகக்கூடிய செலவுகளை விட 120 முதல் 160 கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவாகும் என்கிறார், ஐ.சி.எப். பின் மேற்பார்வையாளர். கூடுதலாகச் செலவாகும் இந்தப் பணத்தைக் கொண்டே சென்னை, கபூர்தலா மற்றும் ரேபரேலியில் உள்ள ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் ஆலைகளின் உற்பத்தியின் அளவை உயர்த்த முடியும் என்கிறார்.

நாட்டு நலனுக்கே எதிரான இத்தனியார்மயத் திணிப்பை எதிர்த்து ஐ.சி.எப். தொழிலாளர்கள் பல்வேறு சங்கங்களைக் கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழுவைக் கட்டியமைத்ததோடு, 12,000 தொழிலாளர்களும் கருவிகளைக் கையிலெடுக்காத வேலைநிறுத்தத்தை மார்ச் 6 அன்று நடத்தினர். பின்னர் கடந்த மே 4-ஆம் தேதியன்று தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ரயில்வே வாரியத்தின் உயர் அதிகாரிகள், ஒப்பந்தம் போட்ட பிறகு அதிலிருந்து பின்வாங்க முடியாது என்று இத்துரோகத்தனத்தை நியாயப்படுத்தியதால், போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூட்டு நடவடிக்கைக் குழு தீர்மானித்துள்ளது. மீண்டும் ரயில்வே வாரியம் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவதாக அறிவித்துள்ளதால், தற்போதைக்கு போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பொதுச்சொத்தைச் சூறையாடினால் முன்பெல்லாம் அதற்குப் பெயர் கொள்ளை. இப்போது அதன் பெயர் தனியார்மயம். நம் கண்ணெதிரே பொதுச் சொத்து சூறையாடப்படுகிறது. இந்த அநியாயத்துக்கு எதிராகக் கூட்டுக் கொள்ளையர்களான அமைச்சர்களிடமும் ஓட்டுக்கட்சித் தலைவர்களிடமும் முறையிடுவதால் எதையும் சாதிக்க முடியாது என்பதைக் கடந்த கால அனுபவங்கள் நிரூபித்துள்ள போதிலும், இந்த ஒப்பந்தங்களை மையப் புலனாய்வுத்துறை ஆய்வு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி, அப்போதைய ரயில்வே அமைச்சர் பவன் குமார் பன்சாலிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அவரது பதிலையும் சேர்த்து ரயில்வே வாரியத்துக்கு அனுப்பித் தனியார்மய எதிர்ப்பு நாடகமாடுகிறார், சி.பி.எம். கட்சியின் நாடாளுமன்ற மேலவை உறுப்பினரும் டி.ஆர்.இ.யு. சங்கத்தின் தலைவருமான டி.கே. ரங்கராஜன். இந்த ஒப்பந்தங்களைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்த போதிலும், எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வராத ரயில்வே நிலைக்குழுவின் தலைவரான தி.மு.க.வின் டி.ஆர்.பாலு, இப்போது எதிர்ப்புகள் வலுக்கத் தொடங்கியதும் ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு ரயில்வே வாரியத்திடம் கோருகிறார்.

அனைத்து ஓட்டுக்கட்சிகளும் தனியார்மய-தாராளமயத்தை விசுவாசமாக ஆதரித்து நடைமுறைப்படுத்திவரும் நிலையில், இத்தனியார்மயத் தாக்குதலை எதிர்க்கும் ஐ.சி.எப். தொழிலாளர்கள், மீண்டும் இந்த மண்குதிரைகளை நம்பி ஏமாற முடியாது. புரட்சிகர தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்து அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களுடன் இணைந்து போராடுவதன் மூலமே தீவிரமாகிவரும் தனியார்மயத் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியும்.

தனபால்

## ம.க.இ.க.வின் புதிய பாடல் ஒலிக்குறுந்தகடு




விலை: ரூ.50.00

தொடர்புக்கு:
கண்ணையன் ராமதாஸ்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக்நகர்,
சென்னை – 600 083.
பேச: 044 – 2371 8706; 99411 75876
pukatn@gmail.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# ஈனப்பிறவிகள்!



சென்னை-மதுரவாயல் பகுதியிலுள்ள ஈ.வெ.ரா.பெரியார் சாலையில் கே.தர்மராஜ், சேதுராமன் உள்ளிட்ட ஐந்து பேர் கூட்டாகச் சேர்ந்து ஒரு சிறிய உணவகத்தை நடத்தி வருகின்றனர். மதுரவாயல் போலீசார் இவர்களிடம் மாமூல் வசூலிப்பதை எவ்விதத் தடங்கலுமின்றி நடத்திவந்த வேளையில், ஆறாண்டுகளுக்கு முன்பு அப்போலீசு நிலையத்தில் ஆய்வாளராகப் பதவியேற்ற எஸ்.சீதாராமன் இவர்களிடம் மாமூல் வசூலிப்பதில் ஒரு கேவலமான மாற்றத்தைக் கொண்டுவந்தார். ''மாமூலைப் பணமாகத் தருவதற்குப் பதிலாக, போலீசு நிலையத்தைச் சேர்ந்த நான்கு போலீசாருக்கும் மூன்று வேளை சாப்பாடை மாமூலாகத் தர வேண்டும்'' என அந்த அதிகாரியிடமிருந்து உத்தரவு பறந்தது. இதன்படி நடந்துவந்த அவர்கள், சில மாதங்களுக்குப் பின் சாப்பாடு கொடுப்பதை நிறுத்தி விட்டனர்.

மாமூல் நிறுத்தப்பட்டதைத் தமது அதிகாரத்துக்கு விடப்பட்ட சவாலாகக் கருதிய ஆய்வாளர் சீதாராமனும், தலைமைக் காவலர் திருவேங்கடமும் கடந்த மார்ச் 19, 2007 அன்று அந்த உணவகத்திற்குச் சென்று, அங்கிருந்த தர்மராஜ், சேதுராமனிடம் அவர்களது வாகனத்துக்கான உரிமத்தைக் கேட்டனர். அவர்கள் அந்த உரிமத்தைக் கொடுத்தவுடன், அதனை வாங்கி கிழித்துப் போட்ட அவ்விரண்டு போலீசாரும் மீண்டும் உரிமத்தைக் கொடுக்குமாறு அடாவடித்தனம் செய்தனர். தர்மராஜும் சேதுராமனும் இதனைத் தட்டிக் கேட்டவுடனேயே, அவர்களைத் தாக்கி, போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று சட்டவிரோதக் காவலில் அடைத்தனர். இருதய நோயாளியான தர்மராஜுக்கு இந்தத் தாக்குதலில் மண்டை உடைந்து இரத்தம் வழிந்த போதும் அவரை மருத்துவ சிகிச்சைக்கு அனுப்ப மறுத்தார் ஆய்வாளர் சீதாராமன். தர்மராஜின் வியாபாரக் கூட்டாளிகள் இந்த அத்துமீறல் பற்றி விசாரிக்க போலீசு நிலையத்திற்கு வந்தவுடன், அவர்களையும் சட்டவிரோதக் காவலில் அடைத்ததோடு, வாகனச் சோதனை நடத்தியபொழுது தர்மராஜும் அவரது கூட்டாளிகளும் தலைமைக் காவலரைத் தாக்கியதாகப் பொய்வழக்குப் போட்டு புழல் சிறைக்குள் தள்ளியது, மதுரவாயல் போலீசு.

நீதிமன்றத்தில் இது பொய் வழக்கு என நிரூபிக்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மதுரவாயல் போலீசின் இந்த அத்துமீறலுக்கு எதிராக தர்மராஜ் மனித உரிமை ஆணையத்தில் தொடுத்த வழக்கில், ''பாதிக்கப்பட்ட ஐவருக்கும் தலா ரூ.50,000/- வீதம் ரூ.2,50,000/- ஐத் தமிழக அரசு வழங்க வேண்டும்; இத்தொகையை அவ்விரு போலீசாரின் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ள வேண்டும்; அவர்கள் மீது துறைரீதியான விசாரணை நடத்தித் தண்டிக்கவேண்டும்'' என ஆறாண்டுகள் கழித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.




மதுரவாயல் போலீசார் அந்த ஐந்து பேரையும் தொடர்ந்து மிரட்டி மாமூல் வசூலித்து வந்துள்ளனர்; நியாயமான அடிப்படையில் அவர்கள் மாமூலைத் தர மறுத்தபொழுது, போலீசார் அவர்களை அடித்தும் சட்டவிரோதக் காவலில் அடைத்து வைத்தும் துன்புறுத்தியுள்ளனர்; மாமூல் தர மறுத்த ஒரே காரணத்திற்காக அவர்கள் பொய்வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இத்துணை சட்டவிரோதச் செயல்களையும் செய்த போலீசார் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்; சிறையில் தள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தீர்ப்போ அபராதம் என்ற மொன்னையான தண்டனையை மட்டும்தான் அவர்களுக்கு விதித்திருக்கிறது. அதுவும் அப்போலீசார் வாகன உரிமத்தைக் கேட்ட சமயத்தில் மனித உரிமைகளை மீறி நடந்துகொண்டதற்காக மட்டும்தான் இத்தண்டனை என்றால், மாமூல் கேட்டு அவர்கள் துன்புறுத்தப்பட்டதை, பொய்வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டதைச் சகித்துக் கொள்ள வேண்டியதுதானா?

இது விதிவிலக்காக நடந்துவிட்ட சம்பவம் அல்ல என்பதையும் போலீசு ஒரு ஒட்டுண்ணிக் கும்பல் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் அறிவோம். தமக்குள்ள வானளாவிய அதிகாரத்தின் காரணமாக, கூச்சநாச்சமின்றியும் தண்டிக்கப் படுவோம் என்ற பயமின்றியும் நாலாவிதமான குற்றங்களையும் செய்து வருகிறது, போலீசு. இது போன்ற அத்துமீறல் ஒவ்வொன்றும் போலீசு என்ற அமைப்பையே கலைக்கக் கோரிப் போராட வேண்டும் என்பதை நோக்கி நம்மை உந்தித் தள்ளவில்லையா!